விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 04 திங்கட்கிழமை (17.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 089

SATS TECH



யாழ்.நகரின் முன்னணி Satellite & Cable TV நிறுவனம்

DIAL 021 222 5908

## கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட அரசியல் கட்சிகள் மும்முரம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன. எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இம் மாதம் 27 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளது.

தேர்தலில் களமிறங்கும் பணிகளில் அரசியல் கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. மட்டக்களப்பு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிபுகளினால் உற்சாகம் அடைந்துள்ள அரச தரப்பு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகவும் இதற்குப் பொறுப்பாக அமைச்சர்கள் தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு செல்வதற்கு தங்கியிருந்த யாழ்.இளைஞன் கொழும்பில் கடத்தல்

(கொழும்பு)

வெளிநாடு செல்வதற்காகக் கொழும்பு சங்கமித்த மாவத்தையில் தாயாருடன் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை 7 மணியளவில் வெள்ளை வானில் வந்த பொலிஸ் சீருடை அணிந்தவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை வானில் வந்த பொலிஸ் சீருடை அணிந்தவர்கள் வீட்டினைத் தட்டித் திறந்து, குறித்த இளைஞனைப் பலவந்தமாக வானில் இழுத்து ஏற்றிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகராஜா அருண்ராஜா (வயது-21) என்ற இளைஞனே இவ்வாறு கடத்தப்பட்டவர் ஆவார். இது குறித்து இளைஞனது தாயாரால் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுடன் பேசுவதற்குத் தயார்

# கூட்டமைப்பிடம் புலிகள் உறுதி

## யுத்தநிறுத்த ஒப்பந்தம் அவசியம் எனவும் தெரிவிப்பு

(கொழும்பு)

**யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டால் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக விருப்பதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பின் போது விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்ததாக சண்டேலீடர் செய்தி வெளியிட்டுள்ளது.** (10 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தைப் பகுதியில் பஸ்ஸில் குண்டுப் புரளி

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று ஏற்பட்ட குண்டுப் புரளியினால் பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. புறக்கோட்டையிலிருந்து பாணந்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகப் பரவிய வதந்தியையடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

தனியார் பஸ் வண்டியில் காணப்பட்ட பொதியொன்றினையடுத்து வெள்ளவத்தை ஹேலிங்வூட் இடத்திற்கு முன்பாக குறித்த பஸ் நிறுத்தப்பட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பள அதிகரிப்புக் குறித்து ஜனாதிபதி ஆராய்வு

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது மற்றும் பண்டிகை முற்பணத்தை அதிகரிப்பது என்பன தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் அரசதுறை தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (ச-2)

## பொலிஸ் கான்ஸ்டபிள் மன்னாரில் சுட்டுக் கொலை

(மன்னார்)

தலைமன்னார் வீதியில் நேற்றுக் காலை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார், தலைமன்னார் வீதியில் உள்ள வளிமண்டலத் திணைக்களம் அருகில் நேற்றுக் காலை 7 மணியளவிலேயே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எஸ்.வீரசிங்க என்பவரே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை 10 மணியளவில் மன்னார் வைத்தியசாலையில் மன்னார் மாவட்ட நீதிவான் ரி.கே. பிரபாகரன் முன்னிலையில் மரண விசாரணைகள் இடம் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அநுரா காலமானார்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க (வயது-59) கொழும்பில் நேற்றுக் காலமானார். இவர் இலங்கையின் முன்னாள் பிரதமர்களான எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க - சிறிமாவோ தம்பதியினரின் மகனும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரரும் ஆவார்.

ஈரல் புற்றுநோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அவர் கடந்த மாதம் முதல் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். கடந்த சில வாரங்களாக அவரது உடல் நிலை மோசமடைந்தது.

இந் நிலையில் நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் காலமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 1949 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி பிறந்த அநுரா பண்டாரநாயக்க கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்றார்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொண்டார். அங்கிருந்து இலங்கைக்கு மீண்டும் திரும்பிய அவர், மொறட்டுவத் தொகுதியில் போட்டியிட்டு 1977 இல் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1983 முதல் 1988 ஆம் ஆண்டு வரை எதிர்க்கட்சித் தலைவராக அவர் பதவி வகித்தார். 1993 ஆம் ஆண்டு உயர் கல்வி அமைச்சராகவும் 2000 ஆம் ஆண்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இவ்வருடத்துள் சிங்கக் கொடி பறப்பது உறுதி

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் இந்த ஆண்டு இறுதிக்குள் சிங்கக் கொடி ஏற்றப்படுவது உறுதி. அதன் பின் சகல இன மக்களும் இன, மத பேதமின்றி சம உரிமையுடன் வாழும் நிலை உருவாகும் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் எம்.பியுமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். மகிந்த ராஜபக்ஷ, அரசாங்கத்தைப் பாரம் எடுக்கும்போது 17 மாவட்டங்களே மிஞ்சியிருந்தன. எஞ்சியிருந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை உட்பட 8 மாவட்டங்களின் கட்டுப்பாடு புலிகளின் கைகளிலேயே இருந்தது. ஆனால் இன்று அந்நிலை மாற்றிமைக்கப்பட்டுள்ளது என்றார். (ச-5)

## 13 ஆவது திருத்தச் சட்டம் காலந்தாழ்த்திய ஒன்று!

### முன்னாள் ஜனாதிபதி கருத்து



(கொழும்பு)


அரசியல் அமைப்புக்கான 13-வது திருத்தச் சட்டம் மிகவும் சிறிய ஒன்று. அதனை இப்போது நடைமுறைப்படுத்துவது என்பது காலந்தாழ்த்திய செயற்பாடு என்றும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

யாரும் எதிர்பாராத வகையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சுதந்திரக் கட்சி செயற்குழுக் கூட்டத்திற்கு முன்னறிவிப்பின்றி சென்றிருந்த முன்னாள் (10 ஆம் பக்கம் பார்க்க)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2007 உயர் தர பரீட்சையில் '3A'சித்தி பெற்ற மாணவர்களின்

### கௌரவிப்பு நிகழ்வு - 15.03.2008





கலை, வர்த்தகம், கணிதம்,விஞ்ஞானம் ஆகிய துறைகளில் யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்கள்.





யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள்




யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள்.




யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்




வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி.

(தொடர்ந்து வரும்)

## நல்லை ஆதீன முதல்வர் மதுரைக்குப் பயணம்



(யாழ்ப்பாணம்)

மதுரையில் நடைபெறவுள்ள சர்வதேச சித்தாந்த மாநாட்டில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொள்ளவுள்ளார்.

இதற்காக நேற்றுக்காலை அவர் விமான மூலம் கொழும்பு சென்றுள்ளார். எதிர்வரும் 21ஆம்,22ஆம், 23ஆம் திகதிகளில் சர்வதேச சைவ சித்தாந்த மாநாடு மதுரையில் நடைபெறவுள்ளது.

தர்மபுர ஆதீனத்தின் ஏற்பாட்டில் மதுரையில் நடைபெறவுள்ள இந்த சைவ சித்தாந்த மாநாட்டில் இந்தியாவிலும் மற்றும் சர்வ தேசத்தில் இருந்தும் சைவ அமைப்புக்களும் ஆர்வலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## இலங்கை நிலைமைகள் தொடர்பில் ஐ.நா உடனடியாகச் செயற்பட வேண்டும்

### கிருபாகரன் வலியுறுத்தல்

(கொழும்பு)

மோசமடைந்துவரும் இலங்கை நிலைமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை உடனடியாகச் செயற்பட வேண்டும் என்று பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையப் பொதுச் செயலாளர் ச.வி.கிருபாகரன் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் 7-வது கூட்டத்தொடரில்அவர் பேசியதாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அரங்கங்களிலும் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையத்திலும் கடந்த இரு தசாப்த காலமாக இலங்கை மனித உரிமைகள் தொடர்பில் விவாதிக்கப்பட்டவைகளை கவனமாக வாசித்துப் பார்த்தால் இந்த உண்மைகள் தொடர்பில் ஏன் சர்வதேசம் அமைதி காக்கிறது என்ற கேள்வி வெளிப்படுகிறது.

இலங்கை நியாயமற்ற வாதங்களை முன்வைக்கின்ற போதுதெல்லாம் அனைத்துலகம் மிகவும் அமைதியாக இருக்கிறது.

பல சிறப்புப் பிரதிநிதிகள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். பல்வேறு நிறுவனங்களும் இலங்கை தொடர்பிலான உண்மை நிலைமைகளை அறிக்கைகளாக வெளியிட்டுள்ளன.

ஐ.நா செயலாளர் நாயகத்தின் பல சிறப்புப் பிரதிநிதிகளின் பயணங்களை அந்த அறிக்கைகள் சுட்டிக்காட்டியும் இருக்கின்றன. ஒரு சில பிரதிநிதிகள் இலங்கையின் உண்மை நிலைமைகளை வெளிப்படுத்தியமையால் பயங்கரவாதிகளின் ஆதரவாளர்கள் என்ற பெயரோடு திரும்பியும் இருக்கின்றனர்.

2002ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து கடந்த ஜனவரியில் அரசு தன்னிச்சையாக விலகிக் கொண்டது.

இதனால் போர் நிறுத்த மீறல்களைக் கண்காணித்து வந்த நோர்டிக் நாடுகளின் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் இலங்கையிலிருந்து வெளியேறியது.

இப்போது போர் நடைபெற்று வருகிறது. இலங்கையின நிலைமை மிக மோசமடைந்து வருகிறது. ஆகையால் இலங்கை நிலைமைகள் குறித்து ஆராய்ந்து சாத்தியமான அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றார் கிருபாகரன். (ச-5)

## தமிழ்த்தினப் போட்டி ஒளிப்பதிவின்போது மின்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த இரு தினங்கள் நடைபெற்ற மாகாண மட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகளின்போது யாழ். மாவட்ட போட்டியாளர்களின் வீடியோ ஒளிப்பதிவு நேற்று மின் தடை ஏற்பட்டதால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக போட்டியாளர்கள் தெரிவித்தனர்.

போக்குவரத்து சிக்கல்களினால் வடமாகாண தமிழ்மொழித் தினப் போட்டிகள் கடந்த இரு தினங்களாக அந்தந்த மாவட்டத்தில் வைத்தே வீடியோப் பதிவு இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட போட்டியாளர்களின் ஒளிப்பதிவின்போது நேற்று ஏற்பட்ட மின் தடையால் போட்டி நிறுத்தப்பட்டு ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் பெற்று மீண்டும் அதே போட்டியை மாணவர்கள் மேற்கொண்டு வீடியோ ஒளிப்பதிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனால் தமது நிகழ்ச்சியை மீண்டும் மீண்டும் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதாக போட்டியாளர்கள் தெரிவித்தனர். (ச-5)

## வழக்கை சமரசத்திற்கு கொண்டுவரத் தீர்மானம்

கொழும்பு நகரிலுள்ள லொஜ்களில் தற்காலிகமாக தங்கியிருந்த தமிழர்களை பொலிஸார் வெளியேற்றியமை தொடர்பாக கொழும்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கினை சமரசத்திற்கு கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

சில அமைப்புக்களால் தொடரப்பட்ட இவ் வழக்கின் விசாரணைகள் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இதனை சமரசத்திற்கு கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதிவாதிகள் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவிக்கையில் தமிழர்கள் இவ்வாறு வெளியேற்றப்பட்டமை குறித்து பிரதமர் கவலை தெரிவித்திருந்தார்.

இதேவேளை எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறலாகாது என பிரதம நீதியரசர் முன்னர் உத்தரவிட்டிருந்தார் என சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்தே இவ்வழக்கை சமரசத்திற்கு கொண்டுவர ஆலோசிக்கப்பட்டு இதன் பொருட்டு எதிர்வரும் 5ஆம் திகதிக்கு மீண்டும் இவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச)

## தனியார் தபால் முகவர்கள் பொதிகளை ஏற்கத் தடை

(கொழும்பு)

தனியாருக்குச் சொந்தமான முகவர் தபால் நிலையங்கள் பொருள்களை ஏற்றுக் கொள்வது நேற்றிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் எம்.கே.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார். தபால் சேவையில் மோசடியைத் தவிர்க்கும் நோக்கிலேயே இம் முடிபு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இங்கிலாந்துக்கு அனுப்புவதற்கு தயாராக இருந்த வண்ணத்துப் பூச்சி இழைகள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப் பொதி கொள்ளுப்பிட்டியிலுள்ள முகவர் தபால் நிலையம் ஒன்றினால் அனுப்புவரின் முழுமையான தகவல்களை ஆராயாமல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ)

## அரச வைத்தியர்களுக்கு மதவாச்சியில் விசேட பாதுகாப்புக் கருமபீடம்

(கொழும்பு)

அநுராதபுரம், மன்னார் மற்றும் வவுனியா பிரதேசங்களில் சேவை செய்வதற்காக தென்பகுதியிலிருந்து பயணிக்கும் அரச வைத்தியர்களின் நன்மை கருதி மதவாச்சி பாதுகாப்பு சோதனைச்சாவடியில் விசேட பாதுகாப்பு கருமபீடமொன்று இன்று முதல் இயங்கும்.

இதன் மூலம் குறிப்பிட்ட சோதனைச் சாவடியூடாக பயணிக்கும் அரச வைத்தியர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களைக் குறைத்து இலகுவாக பயணிக்க வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இதன் அடிப்படையில் அரச வைத்தியர்களின் வைத்திய உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் விசேட பாதுகாப்பு கரும பீடத்தில் விரைவாக சோதிக்கப்படும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி கஹந்த லியனகே தெரிவித்தார். (அ-5)

# இன்று ஒரு தகவல்

## பதவிக்கர்வம்

ஒரு மனிதனுக்கு பணம், பதவி, புகழ் ஆகிய மூன்று விதத்திலும் கர்வம் உண்டாக வாய்ப்பு உண்டு. பணம் அதிகமாக வந்தாலும், பதவி பெரிதாக வந்தாலும், புகழ் அதிகமானாலும் கர்வம் வரலாம். இந்த மூன்று வகையான கர்வத்துக்கும் இடம் கொடுக்காமல் இருப்பவர்கள்தான் சிறந்த மனிதர்கள். பெரிய பொறுப்பிலே இருப்பவர்களுக்குக் கர்வம் ஏற்படக்கூடாது. அப்படி ஏற்பட்டால் அது எல்லோருக்கும் இடைஞ்சலையே ஏற்படுத்தும்.

ஒரு ராஜா ஒருநாள் தன்னுடைய தலைநகரைச் சுற்றி வரும் போது ஒரு இடத்திலே ஓர் அழகான இடத்தைப் பார்த்தார். ''ஆகா! இந்த இடத்திலே நமக்கென்று ஒரு மாளிகைகட்டினால் எவ்வளவு நன்றாக இருக்கும்'' என நினைத்தார். அந்த இடம் யாருக்குச் சொந்தம் என்று விசாரிக்கச் சொன்னார்.

விசாரித்த போது அந்த நிலம் ஒரு கிழவிக்குச் சொந்தம் என்பது தெரியவந்தது. கிழவி அந்த நிலத்தில் குடிசை போட்டுக்கொண்டு, பூந்தோட்டம் வைத்து அதிலிருந்து கிடைக்கும் பூக்களை மாலையாகக் கட்டி, விற்று சீவித்து வந்தார்.

''அந்த நிலத்துக்கு ஒரு விலையை நிர்ணயித்து கிழவிக்குக் கொடுத்து நிலத்தை வாங்கிவிடுங்கள்'' என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். ஆனால் கிழவி ''இது எனது பரம்பரை நிலம். விற்கமாட்டேன்'' எனக் கூறிவிட்டார். இரட்டிப்பு விலை கொடுப்பதாகக் கூறியும் கிழவி சம்மதிக்கவில்லை.

இதைக் கேட்டதும் ராஜாவுக்கு கோபம் வந்துவிட்டது. ஆட்களைக் கூப்பிட்டார். ''குடிசையைப் பிரித்து எறியுங்கள்'' என உத்தரவிட்டார். அவர்களும் குடிசையை பிரித்து பூந்தோட்டத்தை நாசமாக்கி, கிழவியையும் அந்த இடத்திலிருந்து துரத்திவிட்டார்கள். அந்த இடத்திலே ஓர் அழகான மாளிகையும் கட்டப்பட்டது. அந்த வயதான கிழவியால் என்ன செய்ய முடியும். சாதாரணமானவர்கள் தீங்கிழைத்தால் அரசனிடம் முறையிடலாம். அரசனே தீங்கிழைத்தால் யாரிடம் முறையிடுவது? கிழவி அந்த ஊரிலே இருந்த ஒரு ஞானியிடம் சென்று முறையிட்டார். அவரும் இதை மனதிலே வைத்துக்கொண்டார்.

ஒருநாள் நான் கட்டியுள்ள புதிய மாளிகையைவந்து பாருங்கள் என அந்த ஞானியை அழைத்தான். அவர் போகும் போது ஒரு சாக்குப்பையுடன் ஒரு கழுதையையும் கொண்டு போனார். ''மாளிகைக்கு வரும் பொழுது சாக்குப் பைகளுடனும் கழுதையுடனும் வருகிறீர்களே? எதற்காக?'' என்று ராஜா கேட்டார். இந்த மாளிகைத் தோட்டத்திலே இருந்து சிறிதளவு மண் எடுத்துப்போக அனுமதிக்க வேண்டுமென்றார் ஞானி.

ராஜாவும் சரி என்றார். ஞானி தோட்டத்து மண்ணை சாக்குப் பையில் நிரம்பிக் கட்டினார். அதைத் தூக்கி கழுதை மேல் வைக்க சிறிது உதவி செய்யும்படி ராஜாவை கேட்டார். ராஜாவால் அந்தப் பையைத் தூக்கவே முடியவில்லை. அப்பொழுது ஞானி ''ராஜாவே இந்த ஒரு சாக்கு மண்ணையே உங்களால் தூக்க முடியவில்லை.



அந்தக் கிழவியிடமிருந்து அக்கிரமமாக அபகரித்த இந்த தோட்டம் முழுவதையும் சுமக்க ஆசைப்படுகிறீர்களே! அது உங்களால் முடியுமா?'' என்று கேட்டார். ராஜா யோசித்தார். தனது செயலுக்காக வருத்தப்பட்டார். உடனே கிழவியிடம்சென்றார். ''தாயே தப்பு செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு. இன்றிலிருந்து இந்த மாளிகையும் தோட்டமும் உனக்குத்தான் சொந்தம் என்றார்.

போகும்போது இந்த உலகத்திலிருந்து எதை எடுத்துப் போகப் போகிறோம்? வரும்போது எதைக் கொண்டு வந்தோம்? அதனாலே கர்வப்பட வேண்டியதில்லை.

ஒரு பெரிய மனிதன் சாகக் கிடந்தார். திடீரென அழ ஆரம்பித்தார். ஏன் அழுகிறீர்கள் எனப் பக்கத்திலே இருந் தவர்கள் கேட்டார்கள். நான் இறந்தபின் இந்த ஜனங்களுக்காக நான் இதுவரை செய்துவந்த சேவையை யார் செய்யப்போகிறார்கள் என்பதை நினைத்துத்தான் அழுகிறேன் என்றார் அவர்.

ஓர் இளைஞர் முன் வந்தார். கவலைப்படாதீர்கள். நீங்கள் செய்த சேவையை தொடர்ந்து நான் மாத்திரமல்ல; ஒரு இளைஞர் பட்டாளமே தயாராக இருக்கிறது கவலைப் படாதீர்கள் என்றார். இருந்தாலும் ஒரு சந்தேகம் என்று இழுத்தார் ''என்ன சந்தேகம்?'' என்று கேட்டார் அவர். நீங்கள் இதுவரை என்ன சேவை செய்து வந்தீர்கள் என்பது தெரியவில்லை. அது தெரிந்தால் அதனைத் தொடர்ந்து செய்யக்கூடியதாக இருக்கும் என்றார் அந்த இளைஞர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ வெற்றி பெற்ற இல்லத்திற்கான வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதை முதலாவது படத்திலும், நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி ரி.பெரியதம்பி பாடசாலைக்கு ஒருதொகுதி விளையாட்டு உபகரணங்களை விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் ஆர். ராஜசீலனிடம் கையளிப்பதையும் அருகில் அதிபர் செ.சேதுராஜா நிற்பதையும் படங்களில் காணலாம்.

### க.பொ.த உயர்தரப் பரீட்சை

# பாடசாலை மாணவர் தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாகத் தடை

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட்மாதம் இடம் பெறவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப் பங்களைபரீட்சைத்திணைக்களம் தற்போது கோரியுள்ளது. ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை இப்பரீட்சை நடைபெற இருப்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரி சிங்க தெரிவித் துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்களை ஏப்ரல் மாதம் 09ஆம் திகதிக்கு முன்னதாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். நாட்டின் 25கல்வி மாவட்டங்களி லும் 216 நிலையங்களிலும் இந்தப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் அதிபர்களூடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாகவும் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கப்பட வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் பாடசாலையில் கற்றுக் கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாக தடைசெய்யப்பட்டதோடு இவ்வாறு தோற்றியது தொடர்பாக கண்டறியப்பட்டால் பரீட்சைப் பெறுபேறுகள் இரத்துச் செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் பரீட்சைகளைத் தோற்றுவதற்கும் பரீட்சார்த்திக்குத் தடை விதிக்கப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள்தாம் தோற்றும் பாடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வேண்டியுள்ளார். (அ-7)

# புதிய ஏழு பாவங்கள் வத்திக்கான் அறிவிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

திருச்சபை 7 புதிய சாவுக்குரிய பாவங்களை அறிவித்துள்ளதென்றும் முன்னைய சாவுக்குரிய பாவங்கள் நீக்கப்படுகின்றன என்றும் அண்மையில் இணையத்தளங்களிலும் பத்திரிகைகளிலும் வெளியான செய்திகள் தவறானவை, ஆதாரமற்றவை என பிரித்தானிய ஆயர் பேரவை உறுதிப்பட தெரிவித்துள்ளதாக பாதுகாவலன் ஆசிரியர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிப்பதாவது,

வத்திக்கானிலிருந்து வெளியாகும் ''ஒசவத்தோறே றோமானோ'' என்ற பத்திரிகைக்கு ஆயர் ஒருவர் அளித்த பேட்டியின் போது தற்கால உலகில் பாவங்களாக கருதப்பட வேண்டிய சில விடயங்களை குறிப்பிட்டதே இந்த தவறான விளக்கத்துக்கான அடிப்படையாகும்.

ஜியன்பிரான்கோ ஜிரொட்டி என்ற ஆயர் நவீன உலகில் மனி தனை பாவத்திலே விழச்செய்யக் கூடிய சில காரணிகளை தனது பேட்டியில் சுட்டிக் காட்டியிருந்தார். சூழலை மாசு படுத்தல், போதைப் பொருள் பாவனை, மனித மரபணு மாற்று, மனித உரிமை மீறல், பொருளாதாரசமத்துவமின்மை, ஆடம்பர வாழ்வு, உயிர்களில் பரிசோதனை ஆகியவை நவீன உலகின் புதிய பாவ வெளிப்பாடுகள் என்று அவர் தெரிவித்தார்.

சாவுக்குரிய ஏழுபாவங்கள் என 6ஆம் நூற்றாண்டில் திருத்தந்தை பெரிய கிரகோரியார் அறிவித்த தற்பெருமை, கோபம், மோகம், உலோபம், பொறாமை, சோம்பல், போசனபிரியம் ஆகிய 7 பாவங்களையும் இன்றும் திருச்சபை தலையாய பாவங்களாகவே கருதி வருகின்றது. (அ)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில் நுட்பவியல் சேவையில் III ஆந்தர விவசாயப் போதனாசிரியர், ஆராய்ச்சி உதவியாளர், பண்ணை இயந்திர போதனாசிரியர், பொறியியல் உதவியாளர், பொறியியல் முகாரி, தொழில் நுட்ப அலுவலர், கட்டிட ஓவசியர் வேலை, மேற்பார்வையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2008க்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 2008-04-15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களை 2008-03-14 ஆம் திகதிய வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம்.

* * *

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. இலங்கை தொழில்நுட்ப சேவையின் IIஆம் வகுப்பு 'ஆ' தரம் ஆராய்ச்சி உதவியாளர் பதவி.
2. இலங்கை கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு 'ஆ' தரம். இவற்றிற்கான போட்டிப்பரீட்சை 2008 மே மாதம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும்.

இவற்றிற்கான விண்ணப்பங்கள் 2008-04-10ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த.பெ.இல 13, கெடம்பே, பேராதனை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை 14.03.2008 ஆம் திகதிய வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (ஓ)

# இராசிபலன்

17.03.2008
(பங்குனி 04, திங்கட்கிழமை)
ஏகாதசி பின்னிரவு 01.30 மணிவரை
பூசம் பின்னிரவு 03.14 மணிவரை
இராகுகாலம் 07.49-09.19 மணிவரை
சுபநேரம் 12.19-01.49 மணிவரை
ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | புதிய விடயம்,தாய்வழி உறவு, சுப செலவு. அற்பர் உறவு. |
| இடபம் | இனிய அனுபவம், தெய் தரிசனம், வாக்குமேன்மை, பிரயாண நன்மை. |
| மிதுனம் | மாதர் நட்பு, காரிய தாமதம், பொருள் விரயம், கடின வாக்கு. |
| கடகம | தெய்வ சிந்தை, நண்பர்கள் உதவி, சயனசுகம், போசன சுகம். |
| சிங்கம் | உணர்ச்சிவசப்படல், முயற்சி தாமதம், திடீர் நன்மை, தெய்வ சிந்தை. |
| கன்னி | தொழில் நன்மை, உற்சாகம், தெய்வ தரிசனம், பொருள் சேர்க்கை. |
| துலாம் | உஷ்ண நிலை,. அதிகாரம், பிறர் உதவி, முயற்சி கை கூடும். |
| விருச்சிகம் | உடல் உழைப்பு, வீண் பயம், பித்த ரோகம், திடீர்ப்பயணம். |
| தனுசு | வாகன பயம், ஆரோக்கியக் குறைவு, உறவினர் மனஸ்தாபம், கடின முயற்சி |
| மகரம | தெய்வ தரிசனம், களஸ்திர நன்மை, நல்ல வரவேற்பு, பொருள் சேர்க்கை. |
| கும்பம் | சத்துரு ஜெயம், நல்ல முயற்சி, சுக வாழ்வு, தெய்வ சிந்தை. |
| மீனம் | காரிய இடையூறு, புத்திரரால் கவலை, பணக்குறைவு, தாழ்ந்த சுபாவம். |

வளவன்

### பங்குனித் திங்கள் உற்சவம்

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் உற்சவமான இன்று காலை 10மணிக்கு விசேட ஸ்பனாபிஷேகமும், விசேட பூஜையும் நடைபெறும். மாலை 4 மணிக்கு அம்பாளுக்கு விசேட பூஜை நடைபெற்று உள்வீதி உலாவும் இடம்பெறும். (அ-7)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் நியமனம் விரைவில் வழங்கப்பட இருப்பதனால் அது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்குமாறு தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)

## கணனி வலைப்பின்னலில் மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளை

இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி அச்சுவேலிக் கிளையின் செயற்பாடுகள் கணனி வலைப் பின்னலில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

இவ் வைபவத்தில் மக்கள் வங்கியின் வட பிராந்திய உயர் அதிகாரிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-7)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், சிவலிங்க யோகேந்திரா ஆதரவில் அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய மஹோற்சவ காலத்தின் போது நடத்தப்பட்ட இந்துசமயப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கும் வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் மண்டபத்தில் சிவலிங்க யோகேந்திரா நிலையத் தலைவர் நா.நவராஜ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவில் 'ஆனந்த தரிசனம்' எனும் தலைப்பில் சைவப் புலவர் பாலசண் முகனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.(அ-7)

## பங்குனி திங்கள் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் பங்குனி முதல் திங்களான இன்று காலை 10 மணிக்கு அபிஷேகத்துடன் விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெறுவதுடன் கஞ்சி வார்ப்பு நிகழ்வும் வழமைபோல் இடம்பெறும்.

பொங்கல் நேர்த்தி செய்பவர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது. இதே போன்று நான்கு திங்களும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-136)

## சிவயோக சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் சிவயோகசுவாமிகளுடைய 44ஆவது குருபூசை தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இவ்விழாவில் சுவாமிகளது திரு உருவத்துக்கு விசேஷ அபிஷேகமும் பூசையும் இடம்பெறவுள்ளது. (அ)

+++

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் தவத்திரு சிவயோக சுவாமிகள் குருபூசை தினம் நாளை செவ்வாய்க்கிழமை வித்தியாலய பிரதான மண்டபத்தில் செல்வி ம.ரிசாந்தினி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை இந்து மாமன்றத் தலைவர் செல்வி ம.பிரதிக்காவும், ஈழ நல்லூர் பஜனைக் குழுவின் நற்சிந்தனைப் பாடல்களும் 'சித்தர்களில் யோகர்' எனும் தலைப்பில் சைவ சித்தாந்த பண்டிதர் நித்தியதசிதரனின் சிறப்புச்சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (அ-7)

## யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு அனுமதிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை பீடத்துக்கு 2007, 2008 ஆம் கல்வியாண்டிற்கான நுண்கலைமாணி, நடனம், சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதிப் பரீட்சைகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று திங்கட் கிழமை நடைபெறவுள்ளன.

இதே பரீட்சை வவுனியா வளாகத்தில் 24ஆம் திகதி நடைபெறும். (அ-7)

# ஆனைக்கோட்டை குளத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் குளம் அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் ஆனைக் கோட்டை மூத்த விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்திருக்கும் குளத்தை அபிவிருத்தி செய்து தரும்படி ஆனைக் கோட்டை உயரப் புலம் விவசாய சம்மேளனம், வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலரைக் கேட்டுள்ளது.

பழமைவாய்ந்த இக் குளம் அநேக வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் இருப்பதால் மழைநீரை சேகரித்து வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மழை நீருடன் மண்ணும் கலந்து குளத்திற்கு சென்று குளம் மேடாக மாறிவருகிறது.

அத்துடன் குளத்தைச் சுற்றியுள்ள வயல் நிலங்களும், குடியிருப்புக் காணிகளும் உவர் நிலமாக இருப்பதால் குளத்துடன் சேர்ந்திருக்கும் கிணறு மட்டும் நன்னீராக இருப்பதால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இக் கிணற்றையே குடிநீருக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இக் குளத்தை ஆழமாக்கி அபிவிருத்தி செய்வதன் மூலம் மழை நீரைத் தேக்கி வைப்பதுடன் அருகில் இருக்கும் நல்ல தண்ணீர் கிணற்றை கோடை காலத்திலும் குடிநீருக்குப் பயன்படுத்த முடியும்.

எனவே, விவசாயிகளின் நன்மை கருதியும், இப் பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு குடிநீரைத் தொடர்ந்து பெற்றுக் கொடுப்பதற்காகவும் குளத்தை அபிவிருத்தி செய்து தரும்படி சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-5)




# விழிப்புலனற்றோர் நிதியத்திற்கு அமைச்சர் டக்ளஸ் 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

விழிப்புலனற்றோரின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நான்கு மில்லியன் ரூபா நிதியை வரவு-செலவுத்திட்ட நிதியத்திலிருந்து விழிப்புலனற்றோர் நிதியத்திற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியுள்ளார்.

மேற்படி நிதியானது விழிப்புலனற்றோருக்கான மருத்துவ உதவிகள் அவர்களது படைப்புக்களை வெளிக்கொண்டுவருதல், சுயதொழில் முயற்சிகள், கல்வி நடவடிக்கைகளுக்கான நிவாரணங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிகள் போன்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் படவுள்ளதாக சமூகசேவை, சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

1993 ஆம் வருடம் பாராளுமன்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக் கப்பட்ட விழிப்புலனற்றோர் நிதியத்திற்கு இதுகால வரையில் எந்தவொரு அரசாங்கமும் இந்தளவு பாரியதொரு தொகையை ஒதுக்கவில்லை என்றும் இந்த நிதியத்திலிருந்து 2008 ஆம் வருடம் முதல் உயர்கல்வி கற்கின்ற விழிப் புலனற்ற மாணவர்களுக்கு 1500 ரூபா மாதாந்த தொகையை வழங்கவும் அதேநேரம் பல்வேறு வேலைத் திட்டங்களுக்கும், யுத்தம் காரணமாக பார்வை இழந்தோருக்கும், உதவுவதற்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளதாகவும் விழிப்புலனற்றோர் நிதியம் தெரிவித்துள்ளது. (அ-5)



பருத்தித்துறை தம்பசெட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் மாணவர்களுக்குப் பசுப்பால் வழங்கும் திட்டத்தை சுவாமி சித்ரூபானந்தா ஆரம்பித்து வைக்கிறார். (படம்: பருத்தித்துறை நிருபர்)

# இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட கிளைகள் யாவும் கணனி வலைப்பின்னலில் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகள் அனைத்தும் நேற்று முதல் இலங்கை வங்கியின் வலைப்பின்னலில் இணைக்கப்பட்டிருப்பதாக வடபிராந்திய இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் B.A.அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கணனி வலைப்பின்னலில் இணைக்கப் படாதிருந்த சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை கணனி வலைப்பின்னலில் 301 ஆவது கிளையாக இணைக்கப்பட்டதன் மூலம் சகல இலங்கை வங்கிக் கிளைகளும் கணனி மயமாக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து தொழில்நுட்பவியலாளர்கள் இங்கு வந்து இணைப்பு வேலைகளை செய்ய முடியாத நிலையிலும் வங்கி நிர்வாகம் உள்ளூர் தொழில்நுட்பவியலாளர்களைப் பயன்படுத்தி இப் பணியை செய்ய பணித்தமையால் 6மாத காலத்தில் 7கிளைகளை வங்கியின் கணனி வலைப்பின்னலில் இணைப்பதற்கு முடிந்ததாக அறிவித்துள்ளார். (அ)

## 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் காட்சி இன்றுவரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமுறைக் கலாமன்றத்தால் கடந்த 13 ஆம் திகதி முதல் மேடையேற்றப்பட்டு வந்த தவக்கால ஆற்றுகையான 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் காட்சி அநேகரின் வேண்டுகோளுக்கு அமைவாக இன்றுவரை நீடிக்கப் பட்டுள்ளது. இதற்கமைவாக இன்றைய தினமும் மாலை 5 மணிக்கு 'காவிய நாயகன்' ஆற்றுகை மேடையேற்றப்படவுள்ளது.

கடந்த நான்கு நாட்களிலும் இக் காட்சியை பார்வையிடமுடியாத பார்வையாளர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு திருமுறைக் கலாமன்றம் அறிவித்துள்ளது. (அ)

## நூலக ஆசிரியர்களுக்கான சேவைக்கால கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரிய நூலகர்கள், நூலகத்திற்கு பொறுப்பான ஆசிரியர்கள், நூலக உதவியாளர்கள், நூலக தகவல் ஆசிரியர்கள் ஆகியோருக்கான செயலமர்வுஇன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் பாடசாலையில் கடமைபுரியும் சகல பொறுப்பானவர்களை யும் தவறாது அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப்பணிப் பாளர் திருமதி அ.வேதநாயகம் பாடசாலை அதிபர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## இரத்ததானம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரத்ததானம் செய்யும் நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை நடை பெறவுள்ளது. இத் தினத்தில் வைத்தியசாலை ஊழியர்கள், உத்தியோகத்தர் அனைவரும் இரத்ததானம் செய்யவுள்ளனர்.

23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலை அபிவிருத்திசபையினர் இரத்த தானம் செய்யவுள்ளனர்.

இதில் சகல அபிவிருத்தி சபையினரும் கலந்துகொண்டு இரத்ததானம் செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வுகள் யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-35)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் குருபூசை தினம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதனின் சிறப்புச் சொற்பொழிவும், துர்க்கா புரம் மகளிர் இல்லத்தினரின் நற்சிந்தனைப் பாடல்களும் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம்பெறவுள்ளது. (அ-7)

## வவு.விவசாயக் கல்லூரி மாணவர்களுக்கு கப்பல் பிரயாண ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இருந்து வவுனியா விவசாய கல்லூரிக்கு 2008ஆம் கல்வி ஆண்டு விவசாய டிப்ளோமாவிற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் மாவட்டச் செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

மேற்படி விண்ணப்பதாரிகள் 31ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா விவசாய கல்லூரிக்கு சமூகமளிக்கும்படி அதிபர் அறிவித்துள்ளார்.

எனவே மேற்படி தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நாளை செவ்வாய்க் கிழமை 12 மணிக்கு முன்னர் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் தங்களது பெயர் விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், இவர்களுக்குரிய பிரயாண ஒழுங்கு 24 ஆம் திகதி திங்கட்கிழமை மேற்கொள்ளப் படவுள்ளது எனவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (அ)

## கட்டடத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

பாரதி முன்பள்ளி கட்டடத் திறப்புவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சுதந்திரபுரம் பாரதி முன்பள்ளியில் வசாவிளான் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.அன்ரனி பிரசன்னா தலைமையில் இடம்பெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ். முரளிதரனும், சிறப்பு விருந்தினர்களாக நிக்கொட் நிறுவன பிரதித் திட்டப்பணிப்பாளர் என்.எஸ். ஆர்.சிவரூபன், வலி.வடக்கு பிரதேசசபை செயலாளர் இ.அருணகிரி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வசாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் கே.கலியுகவரதன், தெல்லிப்பழை பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் ஏ.ஜீட்ததேயுஸ், இளைப்பாறிய அதிபர் ஏ.பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-7)

# பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரத்தை விட்டுத்தர தயார்

## பெனாசீர் கட்சியுடன் முஷாரப் பேரம்

(இஸ்லாமாபாத்)

பாராளுமன்றத்தை கலைக்கும் எனது அதிகாரத்தை விட்டுத்தர தயார் என்று பெனாசீர் - நவாஸ் ஷெரீப் கட்சிகளுடன் முஷாரப் பேரம் பேசி வருகிறார்.

பாகிஸ்தானில் கடந்த மாதம் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் பெனாசீரின் மக்கள் கட்சியும் நவாஸ் ஷெரீப் தலைமையிலான முஸ்லிம் லீக்கும் அதிக இடங்களில் வெற்றி பெற்றன. இவை இணைந்து ஆட்சி அமைக்கின்றன. அதிபர் முஷாரப் ஆதரவு பெற்ற கட்சி படுதோல்வி அடைந்தது.

முஷாரப்பின் பதவியை பறிக்க வேண்டும் என்று நவாஸ் ஷெரீப் வற்புறுத்தி வந்தார். பிறகு அவர் அக்கோரிக்கையை கைவிட்டார். அதற்குப் பதிலாக, பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரத்தை முஷாரப்பிடம் இருந்து பறிக்க பெனாசீர் நவாஸ் ஷெரீப் கட்சிகள் முயன்று வருகின்றன. மேலும் முஷாரப்பால் பதவி நீக்கம் செய்யப்பட்ட தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி உள்ளிட்ட அனைத்து நீதிபதிகளையும் மீண்டும் பணியில் அமர்த்த திட்டமிட்டுள்ளன.

இதை அறிந்து முஷாரப் அதிர்ச்சி அடைந்துள்ளார். ஏனென்றால் முஷாரப் அதிபர் தேர்தலில் போட்டியிட தகுதி படைத்தவர் அல்ல என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கை இப்திகார் சவுத்ரிதான் விசாரித்து வந்தார். எனவே அவர் மீண்டும் தலைமை நீதிபதியாக பதவி ஏற்றால் தனது பதவிக்கு ஆபத்து என்று முஷாரப் கருதுகிறார்.

இதையடுத்து அவர் பெனாசீர்- நவாஸ் ஷெரீப் கட்சியினருடன் பேரம் பேசத் தொடங்கி உள்ளார். அதாவது 'இப்திகார் சவுத்ரியை' மீண்டும் பணியில் அமர்த்தும் நடவடிக்கையை கைவிட்டால் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தை நான் விட்டுத்தர தயார் என்று அவர் கூறியுள்ளார்.

சமரச பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பெனாசீர்- நவாஸ் ஷெரீப் கட்சியினர் இத் தகவலை பத்திரிகைகளுக்கு வெளியிட்டனர்.

### பிரதமர் யார்?

இதற்கிடையே பெனாசீர் கட்சி சார்பில் பிரதமர் பதவிக்கு யாரை அமர்த்துவது என்பதில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. மூத்த தலைவர் மக்தூம் அமின் பாகிம் பிரதமர் ஆவார் என்று பரவலாக கருதப்பட்டது. ஆனால் அவருக்கும் பெனாசீரின் கணவர் ஆசிப் அலி சர்தாரிக்கும் இடையே கருத்து வேறுபாடு எழுந்தது.

கருத்து வேறுபாட்டை தீர்க்க பாகிமுக்கும் சர்தாரிக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால் அதில் உடன்பாடு ஏற்படவில்லை. பிரதமர் பதவியை விட்டுத்தர பாகிம் மறுத்துவிட்டார். இதனால் இழுபறி நீடிக்கிறது.



### உள்துறை யாருக்கு?

மேலும் எந்தெந்த கட்சிக்கு எந்தெந்த இலாகா என்பதில் பெனாசீர் கட்சிக்கும் நவாஸ் ஷெரீப் கட்சிக்கும் இடையே கருத்து வேறுபாடு எழுந்துள்ளது. உள்துறை, இராணுவ துறை ஆகியவற்றை இரு கட்சிகளும் குறி வைத்துள்ளன. இதனால் இழுபறி நிலவுகிறது. (அ-5)

## ஜப்பானில் நில நடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பான் நாட்டில் சிச்சிஜிமா தீவு பகுதியில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவானது.

இதனால் தீவு முழுவதும் அதிர்ந்தது. இந்த நில நடுக்கத்தால் சுனாமி ஏற்பட வாய்ப்பு இல்லை என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

ஆனால் கடல் மட்டத்தில் மாற்றம் இருக்கும் என்றும் அது கூறியுள்ளது. (அ-5)

## உலக தரிசனம்

### பள்ளி மாணவர்கள் 23 பேர் பஸ் விபத்தில் பலி

(டமாஸ்கால்)

சிரியா நாட்டில் உயர் நிலைப் பள்ளி மாணவர்கள் சிலர் ஒரு பஸ்சில் டார்டாஸ் என்ற கடலோர மாகாணத்துக்கு சுற்றுலா சென்றனர்.

ஒரு வளைவில் திரும்பும் போது பஸ் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது. அருகில் இருந்த ஒரு வீட்டின் மீது மோதி கவிழ்ந்தது.

இந்த விபத்தில் 23 மாணவர்கள் பலியானார்கள். பஸ் மோதிய வீட்டின் உரிமையாளரும் பலியானார்.

மேலும் 31 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள் ஆவர். அவர்களில் 9 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (அ-5)

# திபெத்தில் பயங்கர கலவரம் 10 பேர் எரித்துக் கொலை

(லாசா)

சீனாவுக்கு எதிராக திபெத்தில் பயங்கர கலரவரம் வெடித்தது. இதில் 10 பேர் எரித்துக் கொல்லப்பட்டனர். கலவரத்தை ஒடுக்க இராணுவம் துப்பாக்கி சூடு நட்த்தியது. போராட்டத்தை தூண்டி விட்டதாக தலாய்லாமா மீது சீனா் குற்றம் சாட்டியுள்ளது.

### திடீர் கலவரம்

கடந்த 50 ஆண்டுகளாக சீனாவின் கட்டுப்பாட்டில் திபெத் உள்ளது. திபெத்துக்கு சுதந்திரம் அளித்து தனிநாடாக அறிவிக்க வலியுறுத்தி திபெத்தில் உள்ள புத்தமத துறவிகள் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக போராட்டம் நடத்தி வருகிறார்கள் அவர்களின் போராட்டத்துக்கு திபெத்திய ஆன்மீக குழு தலாய்லாமா தலைமை தாங்கி வழி நடத்தி வருகிறார். இதனால் தலாய்லாமாவை சீனா எதிரியாக கருதுகிறது.

இந்நிலையில் திபெத்திற்கு சுதந்திரம் கோரி கடந்த சில நாட்களாக தலைநகர் லாசாவில் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம்நடத்திவருகிறார்கள். கடந்த 14ஆம் திகதி நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது அவர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

இதையடுத்து லாசா நகர் முழுவதும் கலவரம் வெடித்தது. ஒரு கும்பல் சீனர்களின் உடமைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தத் தொடங் கியது. சீனர்களுக்கு சொந்தமான ஓட்டல்கள், கடைகள், வங்கிகள், கார்கள் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் ஆகியவற்றை அடித்து நொறுக்கி தீ வைத்தனர். கண்ணில் தென்பட்ட சீனர்களை அடித்து உதைத்தனர். பெண்கள் குழந்தைகள் ஆகியோரையும் விட்டு வைக்க வில்லை. ஒரு மசூதிக்கும் தீ வைத்த னர்.

இந்த வன்முறையில் 10பேர் எரித்துக் கொல்லப்பட்டு இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது. இவர்கள் அனைவரும் அப்பாவிகள் என்றும் அது கூறியுள்ளது.ஒரு பொலிஸ்காரர், 2 ஓட்டல் ஊழியர்கள், 2 கடை சிப்பந்திகள் ஆகியோர் பலியானவர்களில் அடங்குவர்.

ஆனால் வெளிநாட்டினர் யாரும் பலியாகவில்லை என்றும் சீன அரசு கூறியுள்ளது. கலவரக்காரர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தவில்லை என்றும் சீன அரசு கூறியுள்ளது. ஆனால் ஒரு மலைப் பகுதியில் கலவரக்காரர்கள் மீது இராணுவம் துப்பாக்கி சூடு நடத்தியதாகவும் கண்ணீர்புகை குண்டுகள் வீசியதாகவும் நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

### எச்சரிக்கை

கலவரக்காரர்கள் சரண் அடைய இன்று (திங்கட்கிழமை) இரவு வரை சீன அரசு கெடுவிதித்துள்ளது. இரவுக்குள் சரண் அடைந்து விட்டால் கருணை காட்டப்படும் என்றும், இல்லாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சீன அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

### அமெரிக்கா அறிவுரை

இதற்கிடையே திபெத்தியர்கள் மீது படைபலத்தை பிரயோகிக்க வேண்டாம் என்று சீனாவுக்கு அமெரிக்கா அறிவுரை கூறியுள்ளது .சீனாவுக்கான அமெரிக்க தூதுர் கிளார்க் ரெண்ட் சீன துணை வெளியுறவு மந்திரி சான் யேசுயை சந்தித்து பேசுகையில் இதனை தெரிவித்தார்.

சீனாவுக்கு அவுஸ்திரேலியாவும் கண்டனம் தெரிவித்துள்ளது. சீனா திருந்தாவிட் டால் பீஜிங்கில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியை புறக்கணிக்க வேண்டும் என்று ஹொலிவுட் நடிகர் ரிச்சர்டு கெரி அழைப்பு விடுத்துள்ளா். (அ-5)

# சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கு பொதுமன்னிப்பு அளிக்கமுடியாது

## இங்கிலாந்து அரசு அறிவிப்பு

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டில் 4 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் சட்டவிரோதமாக குடியேறி உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு அளிக்கமுடியாது என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இந்த தகவலை குடியேற்ற மந்திரி லியாம் பிர்னே தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

இப் போதைய விசா முறை மாற்றி அமைக்கப்படவேண்டும். அது இன்றைய காலத்துக்கு ஏற்றதாக இல்லை. ஒரு மாதகாலத்தில் புதிய விசா அறிவிக்கப்படும் . அது எளிமையானதாகவும் நியாயமானதாகவும் இருக்கும்.

வெளிநாட்டு மாணவர்கள் லட்சக்கணக்கில் இங்கிலாந்தில் உள்ள கல்லூரிகளில் படிக்கிறார்கள். இவர்கள் மூலம் 56 ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்கிறது. இவ்வாறு மந்திரி லியாம் கூறினார்.

(அ-5)

# புதையுண்ட தொழிலாளி உயிர்பிழைக்க கைகொடுத்த ஹெல்மெட்டும் தியானமும்

(பீஜிங்)

மண்ணில் புதைந்தவரை புத்த தியானமும் மூச்சு பயிற்சியும் காப்பாற்றியுள்ளது.

சீனாவின் கிழக்கு பகுதியில் உள்ள துறைமுக நகரம் நிஜ்போ வேகமாக வளர்ந்து வரும்



நகரமான இங்கு ஏராளமான கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன.

52 வயதான கட்டு மான தொழிலாளர் வாங் ஜியான்சின் 15 அடி பள்ளம் தோண்டும் பணியில் ஈடுபட்டார். தலையில் பிளாஸ்டிக் ஹெல்மெட் மட்டுமே அணிந்தபடி வாங் பள்ளம் தோண்டினார்.

அப்போது ஒரு பகுதி மண் அப்படியே அவர் மீது சாய்ந்து மூடியது. ஒரு சில வினாடிகளில் வாங் மண்ணில் புதைந்தார். அருகில் இருந்த பிற தொழிலாளர் கள் அலறினர். வாங்கை மீட்கும் பணி வேகமாக நடந்தது.

கடப்பாரை அல்லது மண் வெட்டியை பயன்படுத்தினால் உள்ளே இருக்கும் வாங்குக் காயம் ஏற்படும் என்பதால் குவிந்து இருந்த மண்ணை வெறும் கைகளால் அகற்ற தொடங்கினர்.

மண்ணில் புதைந்த வாங்குக்கு நினைவு இருந்தது. ஹெல்மெட் இருந்ததால் அதற்கும் முகத்திற்கும் உள்ள இடைவெளியில் சிறிது காற்று நுழைந்தது. சுவாசிக்க சிறிதளவு காற்று இருப்பதை அறிந்ததும் அவர் பதட்டம் அடையாமல் வேகமாக சுவாசிக்காமல் கவனத்துடன் இருந்தார்.

புத்த மதத்தை பின் பற்றுபவர் என்பதால் தியானம் மற்றும் மூச்சு பயிற்சி செய்தார். வெறும் கைகளால் மண்ணை தோண்டிய தொழிலாளர்களுக்கு வாங்கின் ஹெல்மெட் தட்டுப்பட்டது. உடனே அதை சுற்றியுள்ள மண்ணை வேகமாக அகற்றினர். வாங்கை அப்படியே மேலே துக்கினர். அதுவரை வாங் தியானம் மற்றும் மூச்சு பயிற்சியை விடாமல் செய்து கொண்டு இருந்தார்.

மண்ணில் புதைந்த நபர் சில நிமிடங்களில் இறந்து விடுவார். ஆனால் மண்ணில் புதைந்து இரண்டு மணி நேரமாகியும் வாங் உயிருடன் இருந்தது டாக்டர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

மண்ணில் புதைந்து இருந்த போது என்ன செய்தீர்கள்? என வாங் கிடம் கேட்டனர். அவர் தியானம் மற்றும் மூச்சு பயிற்சியில் ஈடுபட்டதாக தெரிவித்ததும் சுற்றி இருந்த தொழிலாளர்களும் வியப்பில் ஆழ்ந்தனர். சீனாவில் புத்த தியானம் பல ஆயிரம் ஆண்டுகள் பழமையானது.

தற்போது புத்த பிக்குகள் தவிர ஒரு சிலர் தான் அதை கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால் கட்டுமானப்பணியில் ஈடுபட்ட தொழிலாளி அந்த வித்தையைக் கடைப் பிடித்து உயிர் பிழைத்தது அதிசய செயல் தான்.(அ-5)

# 2 தலையுடன் பிறந்த அதிசய பெண் குழந்தை லட்சுமி அவதாரம் என பக்தர்கள் பரவசம்

(லக்னோ)

உத்தரபிரதேச மாநிலம் தத்ரி அருகே உள்ள கவுதமபுத்தர் நகரை சேர்ந்தவர் வினோத்சிங். இவரது மனைவி சுஷ்மா .சுஷ்மாவுக்கு கடந்த 10ஆம் திகதி பெண் குழந்தை பிறந்தது.

அந்த பெண் குழந்தையை பார்த்த டாக்டர் அதிர்ச்சி அடைந்தார். அந்த குழந்தை 2 தலையுடன் பிறந்திருந்தது. இரண்டு தலைகளிலும் தலா இரண்டு கண்கள் வீதம் 4 கண்கள் உள்ளன. தனித் தனியாக 2 தலைகளும் நன்கு இயங்குகின்றன.

2 தலைகளிலும் உள்ள முகங்கள் நல்ல அழகாக உள்ளன. இதை பார்த்த சுஷ்மாவும் அவரது உறவினர்களும் அதிர்ச்சியில் உறைந்தனர். அந்த குழுந்தை பிழைக்காது இறந்து விடும் என்று முதலில் கருதப்பட்டது. ஆனால் இரண்டு தலைக ளுடன் அந்த குழந்தை நல்ல உடல் நலத்துடன் உள்ளது.

3 நாட்கள் தத்ரி நகரில் உள்ள சைபி மருத்துவ மனையில் இருந்த சுஷ்மா இரண்டு தலை குழந்தையுடன் வீட்டுக்கு திரும்பினார். அதன் பிறகுதான் 2 தலையுடன் குழந்தை பிறந்துள்ள தகவல் கவுதமபுத்தூர் நகர் பகுதியில் பரவியது. இதை அறிந்ததும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து வினோத்சிங் வீட்டை முற்றுகையிட்டனர்.

அவர்கள் வரிசையில் நின்று அதிசய குழந்தையை பார்த்து சென்றனர். இரண்டு தலையில் உள்ள கண், காது, மூக்கு, வாய் உள்ளிட்ட எல்லா உறுப்புகளும் நன்கு இயங்குவதால் அதை பார்த்து மக்கள் ஆச்சரியப்பட்டனர். அந்த குழந்தை லட்சுமி அவதாரம் என்று தகவல் பரவியது.

அதிசய குழந்தையை பார்க்க கடும் கூட்டம் திரண்டது. சிலர் தேங்காய் உடைத்து அந்த குழந்தையை வழிபட்டனர். அதோடு காணிக்கையாக பணமும் கொடுத்தனர். சிலர் அந்த அதிசய பெண் குழந்தைக்கு தங்க நகைகளை பரிசளித்தனர். இது பற்றி வினோத்சிங் கூறுகையில், என் குழந்தையை லட்சுமி அவதாரம் என்கிறார்கள். எனவே அந்த குழந்தையை பார்க்க யாருக்கும் நான் தடை போடவில்லை என்றார். (அ-5)

## 138 தமிழர்கள் பூசா முகாமில்

(கொழும்பு)

ஒன்பது பெண்கள் உட்பட 138 தமிழர்கள் காலி, பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைவிட கொழும்பு சைத்திய வீதியிலுள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவில் 6 பெண்கள் உட்பட 77 பொதுமக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வத்தளையில் குண்டு பொருத்தப்பட்ட தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பாதிரியார் ஒருவரும் அவ ரது சாரதியும் நுவரெலியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் 5 போதகர்கள் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# தென்பகுதியின் தகவல்கள் பொய்யானவையென நிருபித்த சிவநேசனின் இறுதி நிகழ்வில் பிரபாகரனின் பிரவேசம்

## 'லக்பிம' ஆங்கில வார ஏட்டின் ஆய்வில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் தொடர்பாக தென்பகுதியில் வேகமாகப் பரவி வந்த தகவல்கள் எல்லாம் பொய்யானவை என்பதனை அண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசனின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பிலிருந்து வெளி வரும் ஆங்கில வார ஏடான லக்பிம தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த வார ஏட்டின் பாதுகாப்பு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ள வற்றின் முக்கிய பகுதிக;

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த 3 மாதங்களாக பெரும் புதிரை ஏற்படுத்தியிருந்தார். அதாவது அவர் இறந்துவிட்டதான அல்லது காயமடைந்து விட்டதான செய்திகளே தென்பகுதியில் பிரதான செய்திகளாக வெளியிடப்பட்டு வந்தன. பொது மேடைகளிலும் அது பேசப்பட்டு வந்தன. கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்ற வான் தாக்குதலில் அவர் காயமடைந்ததாக பல ஊடகங்கள் தகவல்கள் வெளியிட்டிருந் தன. வன்னிக்குச் சென்ற மருத்துவ நிபுணர்கள் அவரை வெளிநாட்டுக்கு கொண்டு செல்லு மாறு பணித்ததாகவும் அரச தொலைக்காட்சி நிறுவனம் தனது பிரதான செய்தியில் தெரி வித்திருந்தது.

மாவீரர் நாள் அன்று நடைபெற்ற வான் தாக்குதலில் அவர் காயமடைந்ததாக சிலர் தெரிவித்தனர். சிலர் அவருக்கு நீரிழிவு போன்ற சிக்கலான வருத்தங்கள் உள்ளதாக தெரிவித்திருந்தனர். அரசு இந்த தகவல்கள் தொடர்பாக ஆர்வமாக இயங்கியதுடன், படை உயர் அதிகாரிகளும் அதனை வலுவாக நம்பியிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடுமையாக காயமடைந்துள்ளதனை தான் வலுவாக நம்புவதாக விமானப் படைத்தளபதி றொசான் குணதிலக்க ஜரிஎன் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார். எனினும் எக்ஸ்ரே முகாம் மீதான வான் தாக்குதலுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் அப்பகுதியில் இருந்து வெளியேறி விட்டதாக புலனாய்வுத்துறை தெரிவித்திருந்தது.

ஆனால் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனுக்கு தனது இறுதி வணக்கத்தினை விடுதலைப் புலிகளின் தலைவர் தெரிவித்த படங்கள் கடந்த சனிக்கிழமை வெளிவந்துள்ளன. அவருடன் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோரும் வணக்கம் செலுத்தியிருந்தனர்.

இந்த படங்கள் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பாக வெளிவந்த எல்லா வதந்திகளையும் பொய்யாக்கி விட்டன. அவர் தொடர்பாக வதந்திகள் வெளிவருவது இது முதற் தடவை அல்ல. ஆழிப்பேரலை தாக்கிய போது விடுதலைப்புலிகளின் தலைவர் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டதாக வதந்திகள் பரவியிருந்தன.

### அடம்பனை நோக்கி நகரும் 58ஆவது படையணி

படையினரின் 58ஆவது படையணி அடம்பனை நோக்கி நகர்ந்து வருவதாகவும் 57 ஆவது டிவிசன் மடுவை நோக்கி மூன்று முனைகளால் நகர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அது மடுவில் இருந்து 1.8 கி.மீ. தூரத்தில் நிலைகொண்டுள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த வாரம் ஏ-9 வீதியில் உள்ள புளியங்குளம் பிரதேசத்தை படையினர் கைப்பற்றி விட்டதாக தென்பகுதியில் தகவல்கள் பரவியிருந்தன. ஆனால் அதில் உண்மையில்லை என்பது பின்னர் தெரியவந்தது. மன்னார் பகுதியில் உள்ள புளியங்குளத்தையே படையினர் கைப்பற்றியிருந்தனர்.

ஆனால் வன்னியில் மிக நெருக்கமான சமர்கள் நடைபெறவில்லை எனவும் விடுதலைப்புலிகள் நேரடியற்ற சூடுகளையே பயன்படுத்தி வருகின்றனர். பொறிவெடிகள் மற்றும் மிதிவெடிகளையும் அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இவையே படையினருக்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன.

அடம்பன் பகுதிக்கான கட்டளைத் தளபதியாக லக்ஸ்மன் விடுதலைப்புலிகளால் நியமிக்கப்பட்டுள்ளார். அடம்பனைத் தொடர்ந்து படையினரின் இலக்கு விடத்தல்தீவாகும். இது விடுதலைப்புலிகளின் விநியோக வழிகளை தடுக்கும் நடவடிக்கையாகும்.

இந்தப் பகுதியில் உள்ள ஆழமற்ற கடற்படையினரின் டோரா வகை தாக்குதல் படகுகள் நடவடிக்கையில் ஈடுபடுவது கடினமாகும். எனவே கடற்படையினர் நீருந்து விசைப்படகுகளையே அப்பகுதிகளில் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் அடம்பனை கைப்பற்றுவது படையினர் ஏ-9 வீதிக்கு பதிலாக ஏ-32 வீதியை கைப்பற்றும் உத்தியை கொண்டுள்ளதை காட்டுகின்றது.

இந்தப் பகுதிகளில் நடைபெற்று வரும் மோதல்களில் கடந்த வாரம் 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 60 படையினர் காயமடைந்துள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. எனினும் உண்மையான இழப்புக்களை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# தொடர்ந்து 10 ஆண்டுகள் காங்கிரஸ் தலைவியாக சோனியா காந்தி சாதனை

இந்தியாவின் ஆளும் ஐக்கிய முற் போக்கு முன்னனிக்குத் தலைமை தாங்கும் காங்கிரஸ் கட்சியின் தலைவியாக தொடர்ந்து 10 ஆண்டுகளாக சோனியா காந்தி இருந்து வருகிறார். இதன் மூலம் 1885இல் பிரித்தானியாவிடமிருந்து விடுதலை அடைவதற்காக காங்கிரஸ் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. முதல் 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக இருந்த ஒரே தலைவர்



என்ற பெருமையை சோனியா காந்தி காங்கிரஸ் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது முதல் 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக இருந்த ஒரே தலை வர் என்ற பெருமையை சோனியா காந்தி பெற்றுள்ளார்.

இந்தியாவின் முதலாவது பிரதம மந்திரியும் நேரு- காந்தி அரசியல் சகாப் தத்தை ஆரம்பித்து வைத்தவருமான ஜவகர் லால் நேருவும், அவரது புதல்வியான இந்திராகாந்தியும் தலா 8 ஆண்டுகள் காங்கிரஸ் தலைவராக இருந்துள்ளனர். இந்திரா காந்தியின் புதல்வரும் சோனியா காந்தியின் கணவருமான படுகொலை செய்யப்பட்ட ராஜீவ் காந்தி 6 வருடங்களே காங் கிரசுக்குத் தலைமை வகித்துள்ளார்.

1991மே மாதம் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது கொல்லப்பட்டதையடுத்து அவரது மனைவியான சோனியா காந்தியை கட்சித் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனினும் அதை அவர் நிராகரித்ததையடுத்து முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1998மார்ச் 14இல் அந்த ஆண்டு இடம் பெற்ற லோக்சபா தேர்தலில் காங்கி ரஸ் தோல்வியடைந்ததையடுத்து கட்சித் தலைமைப் பொறுப்பை சோனியா காந்தி ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து 1999 இடைத் தேர்தலிலும் காங்கிரஸ் தோல்வி கண்டது.

எனினும் பிராந்தியக் கட்சிகளுடன் கூட்டமைப்பொன்றை உருவாக்கி 2004மே பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் கைப்பற்றியதன் மூலம் சோனியா காந்தி அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கினார். சோனியா ஒரு இந் தியர் அல்ல இத்தாலியர் என்ற அடிப்படையில் அவருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களை முறியடிக்கும் வகை யில் ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகப்பட்ட தாரியான மன்மோகன் சிங்கை சோனியா பிரதமராக்கினார்.

1964 இல் ஆங்கிலம் கற்பதற்காக இத்தாலியிலிருந்து பிரித்தானியப் பல்கலைக் கழகமான கேம்பிரிட்ஜுக்குச் சென்றிருந்த சோனியா அப்போது அங்கே கல்வி கற்றுக்கொண்டிருந்த ராஜீவ்காந்தியை சந்தித்து இருவருக்கும் காதல் மலர்ந்தது. அவருடன் இந்தியா சென்ற சோனியா 1969இல் ராஜீவைத் திருமணம் முடித்தார். அன்று முதல் இந்தியாவிலேயே வசித்து வரும் சோனியா 1983இல் இந்தியப் பிரஜாவுரிமையையும் பெற்றுக்கொண்டார்.

10 ஆண்டுகள் தொடர்ச்சியாகக் காங் கிரஸ் கட்சியின் தலைவியாக சோனியா இருந்து வருவதை கட்சி மிகவும் எளிமையாகக் கொண்டாடியது. சோனியாவை அவ ருடைய இல்லத்துக்குச் சென்று முதலில் மலர்ச் செண்டு கொடுத்து வாழ்த்தினார்.

பிரதமர் மன்மோகன் சிங் தொடர்ந்து வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி உள்ளிட்ட ஏனை யோர் சோனியாவை நேரில் சென்று வாழ்த்தினர்.

மிகவும் சிக்கலான ஒரு காலகட்டத்தில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் காங்கிரசுக்குத் தலைமை வகிப்பதையிட்டு கட்சிச் செயற்குழு சோனியா காந்திக்கு நன்றி தெரிவித்து வாழ்த்தியது.

சோனியா காந்தியின் தலைமையில் பிரதமர் மன்மோகன் சிங்கின் காலத்தில் இந்தியா பாரிய பொருளாதார வளர்ச்சியை எட்டியிருப்பதுடன் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுடன் நல்லுறவை வளர்த்து ஒரு பிராந்திய வல்லரசு என்ற நிலையையும் தாண்டி வளர்ச்சியடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஊழியர்கள் இன்று முதல் பணிப் புறக்கணிப்பு?

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தொழிற்சங்க ஒன்றியம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் இன்று முற்பகல் முதல் தொடர்ச்சியாக பணிப் பகிஷ்கரிப்பு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதாக தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ரூபவாஹினி கூட்டுத்தாபன ஊழியர்களின் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கமும் ஜனாதிபதியும் உறுதியளிக்க வேண்டுமென தொழிற்சங்க ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

ரூபவாஹினி கூட்டுத் தாபனத்தில் நுழைந்து செய்திப் பணிப்பாளரைத்தாக்கி குழப்ப நிலையை தோற்றுவிப்பதற்கு காரணமாக அமைந்த அமைச்சர் மேர்வின் சில்வாவின் அமைச் சுப் பதவியை இடைநிறுத்தி அவருக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென தொழிற்சங்க ஒன்றியம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற தினத்தில் ரூபவாஹினிக் கூட்டுத்தானத்தில் நுழைந்த குண்டர்களையும் பின்னர் ஊழியர்களை தாக்கிய குண்டர்களையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதும் ரூபவாஹினி தொழிற்சங்க ஒன்றியம் கோரிக்கைகளில் அடங்குகின்றது. (அ)

# விபுலானந்த அடிகளாரின் பிறந்த ஆண்டு மறுபதிப்பில் திருத்தத்துடன் வெளிவரும்

## கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட தரம் 7 சைவநெறி பாடப் புத்தகத்தில் விபுலானந்த அடிகளாரின் பிறந்த ஆண்டு பிழையாகப் பதியப்பட்டுள்ளதாகவும் மறுபதிப்பில் திருத்தத்துடன் வெளிவரும் என்று கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளரும் தமிழ் துறைப் பொறுப்பாளருமான லெனின் மதிவானம் தெரிவித்தார்.

தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாடப் புத்தகங்களில் பல விடயங்கள் பிழையாகப் பதியப்பட் டுள்ளமை குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தரம் 7 சைவநெறிப் பாடப் புத்தகத்தில் விபுலானந்த அடிகளாரின் பிறந்த ஆண்டு பிழையாக பதியப்பட்டுள்ளமை தொடர்பாக பல முறைப்பாடுகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளன என்று தெரிவித்த அவர், இத்தவறுக்கு இந் நூலாக்க குழுவினரே பொறுப்பாவர் என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் திருத்தியமைப்பதற்காக அந்நூலாக்க குழுவினரும் மற்றும் அதற்குப் பொறுப்பாகவிருந்த ஓய்வு பெற்று சென்ற பிரதிக்கல்வி வெளியீட்டு ஆணையாளரும் அழைக்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ-5)

## மாகாண சபைத்தேர்தலில் வாக்களிக்க மட்டு. மாவட்டத்தில் 3,30,950 பேர் தகுதி

(கொழும்பு)


எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு வாக்களிக்க மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 3,30,950 பேர் தகுதி பெற்றிருப்பதாக மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் T. கிருஷ்ணானந்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் கிழக்கு மாகாணசபை தேர்தல் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இதன் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியிலிருந்து 1,54,761வாக்காளர்களும் கல்குடா தொகுதியிலிருந்து 94, 359 வாக்காளர்களும் பட்டிருப்பு தேர்தல் தொகுதியிலிருந்து 81,830 வாக்காளர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

# துறை பற்றிய அறிவே...

ஒரு குறிப்பிட்ட துறையைத் தேர்வு செய்து படிக்க வேண்டும் என்று எல்லோரும் ஆசைப் படலாம். ஆனால் அதற்கு மேலாக ஒரு முக்கியமான விடயம் இருக்கிறது என்பதை பலரும் அறிவதில்லை. அதுதான் அந்தத் துறையைப் பற்றிய அறிவு. திறனறியும் தேர்வுகளின் போது இந்த அறிவு பரிசோதிக்கப்படுகிறது. குறிப்பிட்ட துறையில் ஆசை மட்டும் இருந்து விட்டு, அத்துறையில் போதுமான அறிவு இல்லை என்றால் அத் துறையில் சாதிக்க முடியுமா?

# சாதனையாளர்களை உருவாக்கும்!



ஒரு நபருக்கு ஒரு குறிப் பிட்ட அறிவு மட் டும் தான் இருக்கும் என்று நினைக்கக் கூடாது. மூளையின் வெவ் வேறு பாகங்கள் வெவ்வேறு திறனுடன் செயல்படும் தன் மையை உடையது. பகுத் தறி வித்தல் மற்றும் சிந்தித்தல் மூளையின் ஒரு குறிப்பிட்ட பகுதியை சார்ந்தது தான் என்று ஹோவார்ட் கார்ட்னர் கண்டறிந்துள்ளார்.

மொழியியல், பகுத்தறிவு, கலை அறிவு, உடல் அறிவு, இசைஅறிவு , பொதுத் தொடர்பு, சொந்தத் தொடர்பு, இயல்பான அறிவு ஆகியவற்றை மூளையால் திறம்பட செய்யமுடியும். இசையறியும் மூளைப்பகுதியை பயன்படுத்திக் கொண்டே வருகிறவர், தொடர்ந்து இசை யறிவை வளர்த்துக் கொள்கிறார். அவருக்கு இயல்பாக வே இசை பற்றிய விடயங்கள் அத்துப்படி யாகின்றன.

ஒரு துறையைப் பற்றிய அறிவு அவர் அந்தத்துறையில் அவர் பெற்ற திறனறிவை காட்டுகிறது. ஆகவே ஒவ்வொருவரும் தங்களுடைய திறனறிவு எங்கு இருக்கிறதோ அத் துறையில் அவர் வேலை பார்க்க முடிவு செய் வது நல்லது.

பொதுவாக மொழியியல் திறனறிவு உடையவர்கள் வார்த்தைகளில் விளையாடு வார் கள். இயற்கையிலேயே அவருக்கு மொழி அத்துப்படி என்பதால் அவரால் நன்கு பேசவும் எழுதவும் முடியும். ஆசிரியர், பத்திரிகை, எழுத் தாளர், மேடைப் பேச்சு, தொழில்நுட்ப எழுத்தாளர்கள், ரேடியோ அறிவிப்பாளர் உள்ளிட்ட துறையினருக்கு நல்ல மொழி அறிவு இருக்க வேண்டும் என்பதால் இத்துறையில் அவர் கள் கால் பதிக்கலாம். இதுவரை நடத்தப்பட்ட ஆய்வுகளில் குறிப்பிட்ட துறையில் திறன்மிக் கவர்கள் அத்துறையில் சிறந்து விளங்கியிருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. வெவ்வேறு துறைகளில் சிறந்து விளங்கியுள்ளவர்கள் அது தொடர்பான துறைகளில் வாய்ப்புக் கிடைத்த போதும் சிறந்து விளங்கியிருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.

அருந்ததி ராய், சல்மான் ருஷ்டி, ஆர்.கே. நாராயணன் உள்ளிட்டோர் எழுத்துத் துறையில் சிறந்து விளங்கியதற்கு அவர்களின் மொழி அறிவுதான் காரணம். கருத்துக்களை புரிந்துகொண்டு, பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்க வல்லவர்கள் கணித சிக்கல் களையும் விடுவிப்பார்கள். தொழில்நுட்பம், அறிவியல் துறைகளில் இவர்கள் சிறந்து விளங்குவார்கள். அவ்வாறு சிறந்து விளங்கியவர்களில் சர்.சி.ராமன், ராமானுஜம், ஹோமி பாபா, அப்துல்கலாம் உள்ளிட்டோர் அடங்குவர்.

ஜி.டி.நாயுடு போன்றவர்கள் இயந்திரவியலில் திறனறிவு கொண்டவர்கள். எம்.எப். உசேன், ரவிவர்மா, கமல்ஹாசன், மணிரத்னம் போன்றவர்கள் கலையுலக அறிவு கொண்டவர்கள்.

ஜெயசூர்யா, அர்ஜுன் ரணதுங்கா, பிரபு தேவா போன்றோர் உடல் திறன் கொண்டவர்கள். சுசிலா, லதாமங்கேஷ்கர், எஸ். பி.பாலசுப்பிரமணியன் ஆகியோர் இசை ஞானம் கொண்டவர் கள். பொது மக்கள் தொடர்புகொள்ளும் திறன் கொண்டவர்கள் பொது மக் களை நன்கு அணுகி அவர்களிடம் நல்ல தொடர்பை உருவாக்குவார்கள். இதுபோன்ற திறன்கொண்டவர்கள், நல்ல வாடிக் கையாளர் பலத்தைக் கொண்டு தொழி லில் சாம்ராஜ்யத்தை உருவாக்கு வார்கள்.

தன்னைப் பற்றி நன்கு அறிந்தவர்கள், தன்னுடைய பலம் மற்றும் பலவீனத்தை அறிவார்கள் எதைச் செய்ய முடியும். எதை செய்ய முடியாது என்பதையும் நன்கு அறிந் திருப்பார்கள்.

பிறருக்கு உதவ வேண்டும் என்ற சேவை எண்ணத்தில் உள்ளவர்கள் இவர்கள். இயற் கையின் பால் ஈடுபட்டு அதன் மீது தங்களது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்வார்கள். டாக்டர் சலீம் அலி, மேனகாகாந்தி, குரோக டைல்மேன் போன்றவர்கள் இதற்கு உதாரணம்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் அவர்களது எதிர்காலத்தை முடிவு செய்யக்கூடாது. பகுத் தறிவு திறன் மற்றும் வார்த்தைகளில் அதிக பரிச்சயம் உள்ளவர்களால் தேர்வுகளை நன்கு எழுதமுடியும். ஆனால் அவர்களது மற்ற மூளைப் பகுதியில் பிற திறன்கள் தேங்கியி ருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. சச்சின் டெண்டுல்கர் எக்கவுண்ட்டாகவோ மணிரத்னத்தை விஞ்ஞானியாகவோ ஆக்க முயற்சித்திருந்தால் எப்படியிருந்திருக்கும். அதுபோல் தான் பெரும்பாலான பெற்றோர் கள் சிந்திக்கிறார்கள்.

மனம் நலன் பாதிக்கப்பட்டவர்களைத் தவிர மற்ற ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான திறமை பொதிந்திருக்கிறது. இவை யெல்லாம் வெளியில் தெரியாது. கொஞ்சம் மட்டுமே வெளியில் தெரியும். வீட்டு சூழ்நிலையும் பாடசாலைச சூழ்நிலையும் திறமையை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும். வெளிக்கொண்டு வந்த திறனை பட்டை தீட்டி திறனுள்ளவர்களாக மாற்றவேண் டும்.

சைக்கோமெட்ரிக் பரிசோதனை மூலம் ஒவ்வொரு தனிநபரின் திறனை அறியலாம். மாணவர்களுக்குள் பொதிந்துள்ள ஒவ்வொரு தனிப்பட்ட திறமையையும் அளவிடமுடியும். பரிசோதனையின் போது இடம்பெறும் கேள் விகளுக்கு மாணவர் அளிக்கும் பதிலிலிருந்து



இந்த அளவீடு கணக்கிட்டுக் கொள்ளப்படு கிறது. இது அறிவியல் பூர்வமான முறை. இதைப் பரிசோதிப்பதற்கு என்று தனியான திறமை வாய்ந்தவர்கள் பணியில் அமர்த்தப் படுகின்றனர்.

குறிப்பிட்ட வேலைக்கு இவ்வளவு திறன் இருக்க வேண்டும். அதை சைக்கோமெட்ரிக் பரிசோதனை நடத்தும் நிபுணர் கண்டறிந் தார். சட்டத்தரணி திறன் அவசியம் நீதிமன் றிற்கு அளிக்கும் வழக்குத் தகவல் களில் நல்ல மொழித்திறன் இருக்கவேண்டும். பல்வேறு கோணத்தில் சிந்திக்கும் திறன் படைத்தவராக இருக்கவேண்டும். இதுபோன்று ஒவ்வொரு வேலைக்கும் குறிப்பிட்ட திறன் தேவைப்படுகிறது. எனவே ஒருவருக்கு என்ன திறன் இருக்கிறது. அதற்கேற்ப அவர் தேர்ந் தெடுக்கும் துறை எது என்பதை முடிவு செய்ய வேண்டும்.

இதற்காகத் தான் தற்போது ஐ.டி, நிறுவனங்கள் புதிதாக படித்து முடித்துள்ள மாணவர் களை வேலைக்கு சேர்க்க கல்லூரிகளில் இன் டர்வியூ நடத்தும் போது ஆப்டியூட், டெஸ்ட் எனும் திறனறிவில் தேர்வு நடத்துகின்றன. ஒரு குறிப்பிட்ட வேலையை குறிப்பிட்ட அளவில் செய்வதற்கான உள்ளார்ந்த அல்லது கற்றுத் தேர்ந்த ஒரு போட்டித்திறன் மிக்க விடயம் தான் திறனறிதல்.

திறனறிதலுக்கும் திறமைக்கும் வித்தியாசம் உள்ளது. திறனறிவு என்பது பயிற்சி அளித்து பயன்படுத்தும் நிலையில் உள்ள ஆற்றலைக் குறிக்கும். திறமை என்பது தற்போதைய நிலையில் ஒரு குறிப்பிட்ட நபரிடம் காணப்படுவதாகும். ஒரு குழந்தை குறிப்பிட்ட வேலையை செய்வதிலிருந்து அக் குழந்தையின் திறனறிவை பரிசோதிக்கலாம். ஒரு குழந்தை படம் வரைகிறது என்றால் அக் குழந்தை எம்.எப்.உசேன் ஆகும் என்றோ அல்லது பிகாசோ ஆகும் என்றோ கூறிவிடமுடியாது. ஆனால் அந்தக் குழந்தைக்கு 'கலை' பற்றிய திறனறிவு இருக்கிறது என்று சொல் லலாம்.

குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட பொருளை கற்பனை செய்து பார்க்கும் திறனறிவு அந்தக் குழந்தைக்கு இருக்கிறது என்று சொல்ல லாம். இயந்திர பொருளை ஒரு குழந்தை கழற்றி சரியாக பொருத்துகிறது என்றால் அந்தக் குழந்தைக்கு இயந்திரங்களைப் பற்றிய திறனறிவு இருப்பதாகக் கருதலாம். திறனறிவு பரிசோதனை அனைத்தும் தனி நபரின் அறிவுத்திறனை பரிசோதிப்பதாகவே அமையும். உங்கள் மூளையில் இருப்பது மூடி மறைக்காமல் அந்தப் பரிசோதனையில் தெரிந்துவிடும். ஒரு குறிப்பிட்ட விடயத்துக் கான காரண காரியங்களை ஆராய்தல், பிரச்சினைகளின் போது முடிவெடுத்தல் அறியப்படும். இது பொதுவாக புலனறிவு அல்லது ஐ.க்யூ என்று அழைக்கப்படுகிறது.




# புது வேலை வாய்ப்புகள் புதுமையான படிப்புகள்

உளகளவில் இன்று அதிகரித்து வரும் போட்டி காரணமாக, குறிப்பிட்ட தகுதியிலிருந்தும் வேலை கிடைப்பது என்பது பலருக்கு குதிரைக் கொம்பாக இருக்கிறது.


இதற்குக் காரணம், ஒரு பணியிடத்திற்கு பலரும் போட்டியிடுவது தான். அதேநேரத் தில், பல்வேறு துறைகளில் அதிக் வேலை வாய்ப்புகள் இருந்தும், போதிய பணியாளர் கள் இல்லாமல் தவிக்கும் நிலை காணப்படு கிறது.

அதுபோன்ற துறைகளை தேர்ந்தெடுத்து படித்தால், வேலை கிடைக்கவில்லை என்று யாரும் கூறவேண்டிய தேவை ஏற்படாது. அதனால், புதுமையான படிப்புகளைத் தேர்ந் தெடுத்து படித்தால், நல்ல ஊதியத்துடன் வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. அது போன்ற ஒரு சில துறைகளை பார்க்கலாம்...

**எத்னோமியூசிக்காலஜி**

(Ethno-Musicology)

இசையை அதன் கலாசார பின்னணியுடன் படிப்பதே எத்னோ மியூசிக்காலஜி எனப்படுகிறது. இசையை உருவாக்குபவர் களை பற்றிய படிப்பு எனவும் எத்னோ மியூசிக் காலஜியை கூற முடியும். ஒவ்வொரு இனமும் தங்களுக் கான இசையை உருவாக்குகின்றன. இசைக் கருவி, ஒலி போன்றவை இடத் துக்கும், மக்க ளுக்கும் ஏற்றபடி மாறுகின்றன.



இதுதவிர வயது, பாலினம், மதமும் இசையின் வடிவத்தைத் தீர்மானிக்கின்றன. எத்னோ மியூசிக்காலஜி படிக்கும்போது பல் வேறு வகையில் இசை தொடர்பான தகவல் களைத் திரட்டி ஆவணப்படுத்துகின்றனர். இவர்களது பணிக்குஎல்லை, வரைய றைகள் கிடையாது.

லண்டன்பல்கலைக்கழகத்தில் எத்னோ மியூசிக்காலஜி இளங் கலை படிப்பாக உள் ளது. கலிஃபோர்னியாவில் உள்ள பெர்க் லே பல்கலைக்கழகத்திலும் இசையில் இளங்கலை படிப்பு உள்ளது.

**மார்க்கெட்டிங் ரிசர்ச்**

விற்பனைத்துறையில் ஏற் படும் சிக்கல்களைக் கண் டறிந்து, அவற்றுக்கு தீர்வுகளை ஆராய்வதே மார்க்கெட்டிங் ரிசர்ச்.

**கீழ்க்கண்டவை இதில் அடங்கும்**

வாங்கும் திறன் படைத்த வாடிக்கையாளரை கண்டறி வது- நுகர்வோரின் தேவை கள் குறித்து ஆய்வு செய்வது- புதிய, மேம் படுத்தப்பட்ட பொருட்களுக்கான தேவையை ஆய்வு செய்வது- போட்டி தயாரிப்புகள் குறித்த தகவல்களை திரட்டுதல் பொருட்களில் விலையையும், இலாபத்தையும் முடிவு செய்வது சரியான தகவலை, சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான நபரி டம் கொண்டு சேர்க்க மார்க் கெட்டிங் ரிசர்ச் உதவுகிறது.




சிறிய, பெ ரிய , நடுத்தர நிறுவனங்களில் (தனியார் நிறுவனமோ, அரச நிறுவனமோ) முக்கியமான தருணங்களில் முடிவெடுக்க இது உதவும்.

விற்பனை தொடர்பான பிரச்சினைகளை விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து முடிவெடுக்க மார்க்கெட்டிங் ரிசர்ச்சில் கற்றுத் தருகின்ற னர்.

இதனால் பயனடைபவர்கள்

- நுகர்வோர்
- சந்தை இடைத்தரகர்கள்
- வணிக நிறுவனங்கள்
- அரசு
- பொருள் உற்பத்தியாளர்கள் .

**ஸ்போர்ட்ஸ் ஜேர்னலிசம்**

இன்று எல்லாப் பத்திரிகைகளும் விளையாட்டுக்கு முக்கியத்துவம் தருகின்றன. 'டிவி', ரேடியோ, வெப்சைட்களிலும் விளையாட் டுச் செய்திகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பல்வேறு வகையான இரசனையுடைய வாசகர்களையும் அடையும் வகையில் விளையாட்டுச் செய்திகளைத் தருகின்றனர் ஸ்போர்ட்ஸ் ஜர்னலிஸ்ட்கள். இது ஒரு தனித்துவமான துறை. எனினும், பத்திரிகையியலில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகக் கூறமுடியாது.

எழுத்துத்திறன், சம்பவங்களை விவரிக்கும் திறன் மற்றும் ஸ்போர்ட்ஸ் ஜர்னலிஸ் ட்களுக்கு இருக்கும் வாய்ப்புகள் குறித்து ஸ்போர்ட்ஸ் ஜேர்னலிசத்தில் முதுகலை படிக்கும் மாணவர்கள் அறிந்து கொள்கின் றனர்.

## நிவாஷன்

பல்வேறு வகையான விளையாட்டுகள் பற்றியும், அவற்றின் விதிகள் பற்றியும், அது தொடர்பான நுட்பமான தகவல்களைப் புரியும் வகையில் விளக்குவது பற்றியும் இதில் கற்றுக் கொடுக்கின்றனர். அச்சுத் துறை, ரேடியோ, 'டிவி' ஒளிபரப்பு தொடர்பாகவும் மாணவர்கள் அறிந்துகொள்கின் றனர்.

ஸ்போர்ட்ஸ் ஜேர்னலிசம் படித்தவர்களுக்கு நாளிதழ்கள், பத்திரிகை, ரேடியோ, 'டிவி'க்களில் வேலைவாய்ப்புகள் உள்ளன. இது தவிர விளையாட்டு அமைப்புகளில் மீடியா நிர்வாகிகளாகவும், மக்கள் தொடர்பு அதிகாரிகளாகவும் பணியாற்றலாம்.

# 196 ஓட்டங்கள் எடுத்தால் நியூசிலாந்து அணி வெற்றி

## 4 விக்கெற்றுக்களே கைவசமுள்ளது

(வெலிங்டன்)

இரண்டாவது டெஸ்டில் நியூசிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக 438 ஓட்டங்களை இங்கிலாந்து அணி நிர்ணயித்தது. நியூசிலாந்திற்கு சுற்றுப்



பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இத் தொடரின் முதலாவது போட்டியில் வெற்றி பெற்று நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க இரண்டாவது போட்டி கடந்த 13ஆம் திகதி முதல் வெலிங்டனில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி இங்கிலாந்தை முத லில் துடுப்பெடுத்தாட அழைத்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற் றுக்களையுமிழந்து 342 ஓட்டங்களை எடுத்தது. இதில் அம் புரூஸ் 102 ஓட்டங்களையும் கொலின் வூட் 65 ஓட்டங்களையும் குக் 44 ஓட்டங்களையும் எடுத்ததுடன் வோகன் 32, பீற்றர்ஸன் 31 ஓட்டங் களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் கில்லஸ்பி 4 விக்கெற்றுக்களையும் ஓரம் விக்கெற்றுக்களையும் மில்ஸ் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 198 ஓட்டங்களை மாத்திர மெடுத்து சகல விக்கெற்றுக்களையுமிழந்தது. இதில் அணித் தலைவர் விக்டோரி ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் ரெய்லர் 53 ஓட்டங்களையும் பிளமிங் 34 ஓட்டங்களை யுமெடுத்தனர். பந்து வீச்சில் அன்டர்சன் 5 விக்கெற்றுக்களையும் கொலின் வூட் 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸில் 144 ஓட்டங்களால் முன்னிலையிலிருந்த இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றுமுன்தினம் 3ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 9 விக்கெற்றுக்களையிழந்து 277 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

4ஆம் நாளான நேற்று தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அதன் இரணடாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 293 ஓட்டங்களை எடுத்தது. இதன் மூலம் நியூசி லாந்து அணிக்கு வெற்றி இலக்காக 438 ஓட்டங்களை இங்கிலாந்து அணி நிர்ணயித்தது.

இதில் குக் 60 ஓட்டங்களையும் கொலின் வூட் 59 ஓட்டங்களையும் ஸ்ரொரஸ் 44, பெல் 41 ஓட்டங்களையுமெடுத்தனர். பந்து வீச்சில் ஓரம் 3 விக்கெற்றுக்களையும் மார்டீன், மில்ஸ் மற் றும் கில்லஸ்பி ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர். தொடர்ந்து 438 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடும் நியூ சிலாந்து அணி நேற்றைய 4ஆம் நாள் ஆட்ட நேரமுடி வில் 6 விக்கெற்றுக்களையிழந்து 242 ஓட்டங் களை எடுத்திருந்தது.

இதில் ரெய்லர் 55 ஓட்டங்களையும் ஆட்ட மிழக்காமல் மக்குலம் 43 ஓட்டங்களையும் சிங்கிலியர் 39, பிளமிங் 31 மற்றும் ஓரம் 30 ஓட்டங்களை யுமெடுத்தனர். பந்து வீச்சில் சையிட் பொத்தம் 3 விக்கெற்றுக்களையும், பிரோட் 2 விக்கெற்றுக்



களையும் வீழ்த்தினர். 5ஆவது இறுதி நாளான களத்தில் மக்குலம், விக்டோரி ஆட்டமிழக் காமல் 4 விக்கெற்றுக்கள் கைவசமுள்ள நிலையில் 196 ஓட்டங்களைப்பெற்றால் நியூசிலாந்து அணி வெற்றி பெறலாம். 195 ஓட்டங்களுக்குள் அல்லது 4 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினால் இங்கிலாந்து அணி வெற்றிபெறலாம். (5)

## ஹர்பஜனோடு சமரசம் செய்ய தயாராகவுள்ளேன் - ஹைடன்

(சிட்னி)

இந்திய வீரர் ஹர்பஜன் சிங்கோடு சமரசம் செய்து கொள்ள தயாராக இருப்பதாக அவுஸ் திரேலிய வீரர் மத்யூ ஹைடன் கூறியுள்ளார்.

இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்கு சென்றிருந்தபோது ஹர்பஜன் சிங் மற்றும் அவுஸ்திரேலிய வீரர்கள் இடையே மோதல் ஏற்பட்டு பெரும் சர்ச்சை உண்டானது.

அவுஸ்திரேலிய வீரர் ஹைடன் இந்திய வீரர் ஹர்பஜன் சிங்கை பேட்டி ஒன்றில் விஷச் செடி என்று கூறியிருந்தார்.

இந்தியா திரும்பிய ஹர்பஜன் சிங் ஹைடனை பொய்யர் என்று கூறினார். இதனால் மீண்டும் சர்ச்சை ஏற்பட்டது.

இந்நிலையில் ஹர்பஜன் சிங்கோடு சமரசம் செய்து கொள்ள மத்யூ ஹைடன் முன் வந்துள்ளார்.

வாய்ப்பு கிடைத்தால் ஹர்பஜன் சிங்கோடு மனம் விட்டு பேசி கருத்து வேறு பாட்டை சரி செய்து கொள்ள விரும்புவதாக அவர் கூறியுள்ளார்.

ஐபிஎல் போட்டிகளில் சென்னை அணி சார்பில் விளையாட ஹைடன் தேர்வாகி





உள்ளார். இந்த போட்டிகளில் பங்கேற்க சென்னை வரும் போது ஹர்பஜன் சிங் கோடு பேசுவேன் என்றும் அவர் கூறியுள்ளார். (5)

# இளம்வீரர்கள் கிரிக்கெற்றிற்கு முதல் மரியாதை அளிக்க வேண்டும்

## கில்கிறிஸ்ட் ஆலோசனை

(புதுடில்லி)

இளம் வீரர்கள் கிரிக்கெற்றுக்கு முதல் மரியாதை அளிக்க வேண்டும். பணத்தை கண்டு



மயங்கிவிடக்கூடாது என கில்கிறிஸ்ட் ஆலோசனை கூறியுள்ளார். அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் விக்கெற் காப்பாளரும், அதிரடித் துடுப்பாட்ட வீரருமான கில்கிறிஸ்ட் சமீபத்தில் ஓய்வுபெற்ற இவர் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) போட்டிகளில் பங்கேற்க உள்ளார்.

இவரை ஐதராபாத் அணி கோடிகளை கொடுத்து வாங்கியுள்ளது. இந்தியா வந்துள்ள இவர் இளம் வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். ஐ.பி.எல் மூலம் கிடைக்கும் பெரும் தொகையை காட்டிலும் கிரிக்கெற் விளையாட்டுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இது குறித்து கில்கிறிஸ்ட் கூறியது,

இவர்கள் பணத்தில் மயங்கி,கிரிக்கெற் ஆர்வத்தை இழந்துவிடக்கூடாது. முதல் மரியாதை எப்போதும் கிரிக்கெற்றுக்கு அளிக்க வேண்டும். இதற்கு சிறந்த முன்னுதாரணமாக சச்சினை கூறலாம். கோடிகளை சம்பாதித்து வரும் இவர் கிரிக்கெற்றிலும் சாதித்து வருகிறார். ஐதராபாத் அணிக்காக விளையாடுவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. புதிய அணி, புதிய இடம் என்பது சகஜமானதுதான். நான் சவுத் வேல்சில் பிறந்தேன். ஆனால் மேற்கு அவுஸ் திரேலிய அணிக்காக விளையாடினேன். உள்ளூரில் பல்வேறு அணிகளில் விளையாடிய அனுபவம் இருப்பதால் ஐதராபாத் அணியி லும் என் னால் ஜொலிக்க முடியும்.

### எல்லை உண்டு

களத்தில் வீரர்கள் தனிப்பட்ட முறையில் விமர்சிக்கக்கூடாது. எப்போதும் எல்லை மீறி நடப்பது நல்லதல்ல. சமீபத்தில் தொடரின் போது இந்திய அவுஸ்திரேலிய வீரர்கள் அளவுக்கு அதிகமாக ஆக்ரோஷம் காட்டினர். சில நேரங்களில் எல்லை மீறினர். இதனை ஒவ்வொரு வீரரும் தவிர்க்க வேண்டும். தவறுகளை விரைவில் திருத்திக் கொள்ள வேண்டும். இதற்கு நல்ல உதாரணம் ஸ்ரீசாந்த் தான். இந்தியாவில் நடந்த தொடரின் போது அதிக ஆக்ரோஷத்துடன் நடந்துகொண்டார். ஆனால் அவுஸ்திரேலிய மண்ணில் முற்றிலும் மாறுபட்டவராக காட்சி அளித்தார். தனது செயல்பாட்டின் மூலம் பதிலடி கொடுத்தார். இந்திய அணி, அவுஸ்திரேலியாவுக்கு தொடர்ந்து சவால் கொடுத்து வருகிறது. சர்வதேச அரங்கில் மாபெரும் சக்தியாக உருவெடுத்து வருகிறது. இவ்வாறு கில்கிறிஸ்ட் கூறினார்.

### மாடுபோல ஏலம்

ஐ.பி.எல்., அணிகளுக்காக வீரர்கள் ஏலம் விடப்பட்டனர். இதில் ஐதராபாத் அணிக்காக கில்கிறிஸ்ட் சுமார் ரூ.2.8 கோடிக்கு வாங்கப்பட்டார். இது குறித்து இவர் கூறுகையில், `வீரர்கள் சாதாரண மாடுகளைப் போல ஏலம் விடப்பட்டதாக உணர்ந்தேன். ஆனாலும் மிகவும் வித்தியாசமான அணுகு முறையாக இருந்தது' என்றார்.

### புனிதமானவன் அல்ல

ஹர்பஜன் சிங் சமீபத்தில் கில்கிறிஸ்டை புனித மானவர் அல்ல என்று விமர்சித்ததாக சர்ச்சை எழுந்தது. இது குறித்து கில்கிறிஸ்ட் கூறுகையில், களத்தில் வீரர்கள் உணர்ச்சி வசப்படுவது சகஜம். அமைதியாக இருப்பது மிகவும் கடினம் இந்தியா போன்ற சவாலான அணிக்கு எதிராக விளை யாடும் போது புனித மானவராக செயல்பட வாய்ப்பு இல்லை. என்றார். (5)

# இந்தியாவுடனான டெஸ்ட் தொடரை வீழ்த்துவதே எங்கள்முக்கிய குறிக்கோள்

## பயிற்சியாளர் ஆர்தர் சொல்கிறார்

(டாக்கா)

டெஸ்ட் போட்டி தொடரில் இந்திய அணியை வீழ்த்துவது எங்கள் முக்கிய குறிக்கோள் என்று தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் மைக்கே ஆர்தர் தெரிவித்துள்ளார். சிமித் தலை மையிலான தென்னாபிரிக்க கிரிக்கெற் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டி தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் கிரிக் கெற் போட்டி சென்னையில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது.

பங்களாதேஷுக்கு எதிரான ஒரு நாள் போட்டி தொடரை 3-0 என்ற கணக்கில் வென்று ஒரு நாள் போட்டி தரவரிசையில் அவுஸ்திரேலி யாவை பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடம் பிடித்த தென்னாபிரிக்க அணி எதிர்வரும் 21ஆம் திகதி சென்னை வருகிறது. இந்நிலையில் தென் னா பிரிக்க அணி பயிற்சியாளர் மைக்கேல் ஆர்தர் டாக்காவில் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது,

எங்கள் அணிக்கு நாங்கள் வைத்து இருந்த குறிக்கோள்களில் ஒன்றை எட்டி உள்ளோம். ஒரு நாள் போட்டி தரவரிசையில் முதலிடத்தை பிடித்தது மிகவும் சிறப்பானதாகும். அடுத்த ஆண்டிலும் நாங்கள் முதல் நிலை அணியாக விளங்கினால் இன்னும் நன்றாக இருக்கும். ஏனெனில் முதல் இடத்தில் நீடிக்க வேண்டும் என்றால் நாங்கள் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 2 தொடரை வெல்ல வேண்டும்.

### இந்திய அணியை வெல்வோம்

இந்தியாவுக்கு எதிரான தொடரில் நாங்கள் அந்த அணியை வீழ்த்தி தொடரை வெல்வோம். பங்களாதேஷிற்கு எதிரான தொடரை நாங்கள் வென்று இருப்பது இந்திய தொடருக்கு ஒரு இனிமையான அனுபவமாகும். வங்களாதேஷ் தொடரை இந்தியாவுக்கு எதிரான தொடருக்கு தயாராகும் களம் என்றே நாங்கள் எப்போதும் கருதுகிறோம்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் மிக வும் சிறப்பானதாகும். பெரிய அணியான இந் தியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தினால் அருமையானதாக அமையும். நாங்கள் இந்த தொடருக்கு சாதாரண அணிக்கு எதிரான போட்டிக்கு தயாராவது போல் தயார் ஆகவில்லை. இந்தியாவுக்கு சென்று அதிக அணி கள் வெற்றி ஈட்டியதில்லை. எனவே இந்திய அணியை அதன் சொந்தமண்ணில் வீழ்த்த வேண்டும் என்பதே எங்கள் அணியின் இந்த ஆண்டுக்கான முக்கிய குறிக்கோளாகும்.

இனவெறி கொள்கை காரணமாக இந்திய அணிக்கு எதிரான தொடருக்கான தென்னா பிரிக்க அணியில் இடம் கிடைக்காத நெல் முக்கிய வீரர் ஆவார். அவர் அணியில் தொடர்ந்து இருப்பார் என்று நம்புகிறேன். இருப்பினும் அவருக்கு எது? சிறந்தது என்பதை அவர் தான் முடிவு செய்ய முடியும். இவ்வாறு அவர் கூறினார். (5)

# ஒருநாள் போட்டி தரவரிசையில் சிமித் முதலிடத்துக்கு முன்னேறினார்

## டெண்டுல்கர் இரண்டாமிடத்துக்கு பின்தள்ளப்பட்டார்

(டுபாய்)

ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் துடுப் பாட்ட தர வரிசையில் தென்னாபிரிக்க வீரர் சிமித் டெண்டுல்கரை பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடம் பிடித்தார். ஐ.சி.சி.ஒருநாள் கிரிக் கெற் போட்டி தரவரிசையில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு இந்திய வீரர் டெண்டுல்கர் முதலிடம் பிடித்தார். முத்தரப்பு போட்டியில் அவுஸ் திரேலியாவுக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் சிறப்பாக ஆடியதன் மூலம் முதலிடத்தை டெண் டுல்கர் பிடித்து இருந்தார்.

பங்களாதேஷிற்கு எதிரான 3 ஒருநாள் போட்டி தொடரில் தென்னாபிரிக்க அணி 3-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. அந்த போட்டி தொடரில் தொடர்நாயகன் விருது பெற்ற தென்னா பிரிக்க அணித்தலைவர் சிமித் (792 புள்ளிகள்) 3ஆவது இடத்தில் இருந்து முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். இந்திய வீரர் டெண்டுல்கர் (777 புள்ளிகள்) 2ஆவது இடத்திலும், அவுஸ் திரேலிய அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் (770 புள்ளிகள்) 3 ஆவது இடமும் பிடித் துள்ளனர். இந் திய அணித் தலைவர் தோனி 10ஆவது இடத்தில் இருக்கிறார்.

### விக்டோரி முதலிடம்

பந்து வீச்சாளர் வரிசையில் நியூசிலாந்து வீரர் விக்டோரி (790 புள்ளிகள்) முதலிடம் பிடித்துள்ளார். அவுஸ்திரேலிய வீரர் பிரக்கன் (770 புள்ளிகள்) 2ஆவது இடமும், நியூசி லாந்து வீரர் பொண்ட் (736 புள்ளிகள் ) 3ஆவது இடமும் பெற்றுள்ளனர். சகலதுறை வீரர்கள் வரிசையில் பாகிஸ்தான் அணித்தலைவர் சோயிப் மலிக் முதலிடம் வகிக்கிறார். (5)

நேற்றுச் செய்த தவறை ஒப்புக் கொண்டால்-
இன்று நீ அறிவாளி என்பதை உணர்த்தும்.
-ஹாலந்து

# வலம்புரி

## இந்தியாவின் கபடத்தனத்தை வெளிப்படுத்தும் 'றோ' அமைப்பின் முன்னாள் அதிகாரி

இலங்கை அரசு வட பகுதியில் மேற்கொண்டு வரும் யுத்த நடவடிக்கைக்கு இந்தியாவின் முழுப் பங்களிப்பு இருப்பதாக றோ அமைப்பின் முன்னாள் அதிகாரி பி.இராமன் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் ஆலோசனை-வழிகாட்டல் என்பவற்றின் அடிப்படையிலேயே வடபகுதிக்கான இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு மேற்கொண்டுவருவதான தகவல் ஈழத் தமிழர்களுக்கு பேரதிர்ச்சியையும், ஆழ்ந்த வேதனையையும் தரக்கூடியதாகும்.

இலங்கை இன விவகாரத்தை தீர்க்கும் விடயத்தில் இந்தியாவிற்கு காத்திரமான பங்கு உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

அண்டை நாடு என்பதற்கப்பால், ஈழத்தமிழர்களின் உடன்பிறப்புகள் வாழ்கின்ற பூமி என்ற அடிப்படையிலும் இந்தியாவின் பொறுப்பும், கடமையும் இலங்கை விடயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

எனினும் அண்மைக்காலமாக இந்தியாவின் நடவடிக்கைகள் இலங்கை அரசுக்கு ஆதரவாக இருப்பதை காணமுடிகின்றது.

இலங்கை அரசுக்கு இந்தியா ஆதரவாக இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் இந்தியா இலங்கைக்கு வழங்கிவரும் ஆதரவானது ஈழத்தமிழர்களுக்கு பாதகமாக அமைந்து விடக்கூடாது என்பது நியாயமான நினைப்பாகும்.

எனினும் இந்திய மத்திய அரசின் முழுச்செயற்பாடும் இலங்கை அரசுக்கு ஆதரவாக இருப்பதுடன் வடக்கில் அரசு நடத்தும் கொடிய யுத்தத்திற்கும் இந்தியாவே முழுப் பங்காளியாக இருக்கின்றது என இந்தியப் புலனாய்வு அமைப்பான றோவின் முன்னாள் அதிகாரி தெரிவித்திருப்பது இந்தியாவை வெட்கித் தலைகுனிய வைப்பதுடன்,

தமிழகத்தில் கவிதை முழக்கம் செய்யும் கலைஞர் கருணாநிதிக்கும் பலத்த அரசியல் தோல்வியாகும்.

ஏனெனில் இலங்கைத்·தமிழர் விடயத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதல்வர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்திற்கு பதில் எழுதிய பிரதமர் மன்மோகன் சிங், இலங்கைத் தமிழர் விடயத்தில் ஓர் நிரந்தரமான தீர்வு விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்திருந்தார்.

பிரதமர் மன்மோகன் சிங் எடுத்த நடவடிக்கை என்ன? அதுதான் வடக்கில் நடக்கும் போரா?

அப்படியானால் இந்திய மத்திய அரசு தமிழக அரசியல் தலைவர்களை ஏமாற்றியுள்ளது. அந்த ஏமாற்றுதல் தமிழினத்திற்கு எதிரானதாகும் என்ற முடிபுக்கு நாம் வரலாம்.

எதுவாயினும் றோ அமைப்பின் முன்னாள் அதிகாரி தெரிவித்த கருத்தில் தமிழக அரசு தலையிடுகிறதோ இல்லையோ உலக நாடுகளும், ஐ.நா. சபை போன்ற அமைப்புகளும் தலையிட்டு இந்தியாவின் செயலைக் கண்டித்து அந்த நாட்டின் கபடத்தனத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பது ஈழத் தமிழர்களின் தாழ்மையான கோரிக்கை ஆகும்.

# சிங்களத்தைப் போல் தமிழையும் அரச கரும மொழியாக அமுல்படுத்தக் கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

## 10 இலட்சம் கையெழுத்துடன் அனுப்ப சகவாழ்வு மன்றம் நடவடிக்கை

(கொழும்பு)

தமிழை அரச கருமமொழியாக அமுல்படுத்தக்கோரி 10 இலட்சம் கையெழுத்துக்களுடன் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்ப நடவடிக்கை. நாட்டில் சிங்கள மொழியைப் போன்று அரச கரும மொழியாக தமிழ் மொழி விளங்குகினாலும் அது அமுலில் இல்லை. அதனை அமுல்படுத்தக் கோரி ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப் படவுள்ளது. அதற்காக 10 இலட்சம் மக்களின் கையெழுத்துக்கள் சேகரிக்கப் படவுள்ளன என சகவாழ்வு மன்றத்தின் நிறைவேற்று அதிகாரியான கலாநிதி குமார் ரூபசிங்க தெரிவித்தார்.

பத்து இலட்சம் கையெழுத்துக்கள் சேகரிக்கும் ஆரம்ப வைபவம் வெள்ளிக்கிழமை பிற்பகல் கண்டி டோம்லின் கேட் போர் கூடத்தில் இடம்பெற்ற போது அங்கு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குமார் ரூபசிங்க அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் இன்று 70 ஆயிரம் பொலிஸார் கடமையாற்றிய போதும் 700 பொலிஸாரே தமிழ் மொழியில் பரிச்சயம் உள்ளவர்கள். தெற்கில் 4000 பொலிஸார் கடமைகளில் இருந்த போதும் 50 பொலிஸாரே தமிழ் மொழியறிந்தவர்களாக இருக்கின்றனர். நுவரெலியா வைத்திய சாலைகளில் 320 பேர் கடமையாற்றிய போதும் 319 பேர் தமிழ் மொழியறியாதவர்களாக விளங்குகின்றனர். இதனால் ஒரு இன மக்கள் தங்களுக்கான சேவைகளை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். இந்நிலை மாற வேண்டும். இதன் பொருட்டு இந் நாட்டில் அரச கரும மொழிகளாக விளங்கும் தமிழ் சிங்கள மொழிகள் இரண்டும் உரிய வகையில் அமுல்படுத்த வேண்டும். 60 ஆண்டுகளாக மொழிப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருந்து வருகின்றது.

இது தீர்க்கப்பட வேண்டும். இதனை தீர்க்கின்ற போது இனப்பிரச்சினையும் தீர்வடைவதற்கு வாய்ப்புள்ளது.

1956ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டார நாயக்க சிங்கள மொழி சட்டத்தை கொண்டு வந்த போது ஜே.ஆர். ஜயவர்த்தனா அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் எதிர்காலத்தில் இது பாரிய பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என தெரிவித்தார்.

அதேபோன்று கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வாவும் இப் பிரச்சினையை எடுத்துக்காட்டி எதிர்காலத்தில் இரத்தம் சிந்தும் நிலை உருவாகலாம் என்பதையும், ஒரு மொழி இரு நாடு ,இரு மொழி ஒரு நாடு என்ற விளக்கத்தையும் வழங்கியிருந்தார்.

ஆனால் சிங்கள மொழியைப் போல் அரச கரும மொழியாக தமிழ் மொழி விளங்குகினாலும் அது அமுலில் இல்லை. அதனை அமுல்படுத்தக் கோரி ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதற்காக 10 இலட்சம் கையெழுத்துக்கள் சேகரிக்கப்படுகின்றது. அதன் ஆரம்பமே இவ்வைபவமாகும் என்றார்.

### ஜனாதிபதிக்கான மகஜர்

ஜனாதிபதிக்கு அனுப்பப்படவுள்ள மகஜரும் அங்கு விநியோகிக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

உடனடியாக அரச கரும மொழியை அமுல் செய்வதன் மூலம் இந்நாட்டுப் பிரஜைகளின் உரிமையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கீழே கையொப்பமிட்டுள்ள நாம் ஜனாதிபதியவர்களையும் அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கிறோம். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக சிங்களமும் தமிழும் அரச கரும மொழியாதல் வேண்டும் என அரச கரும மொழிச் சட்டத்தின்படி அரசியல் யாப் பின் கீழ் கட்டளையிடப்பட்டிருப்பினும் 2008 இல் வடக்கு மற்றும் கிழக்கிற்கும் வெளியில் தமிழிலும், வடக்கு மற்றும் கிழக்கில் சிங்களத்திலும் அரசுடன் கொடுக்கல் வாங்கல் செய்ய இன்னமும் முடியாதுள்ளது.

மொழியானது எம் நாட்டைப் பிரித்து விட்டது. மொழிப் பிரச்சினைகள் காரணமாக எம் நாட்டில் மனித உரிமை மீறல்கள் பெருகிவிட்டன. சட்டப்படி இருக்க வேண்டியிருப்பினும் தமிழ் மொழியில் பரிச்சயமில்லாத அதிகாரிகள் பொலிஸ் நிலையங்களிலும் இராணுவத்திலும் இருப்பதன் காரணமாக தமிழ் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

ஒரே ஒரு அரசகரும மொழியில் காணப்படும் அறிவித்தல் பலகைகள் அந்த மொழியை வாசிக்க முடியாத அனைவரையும் ஒதுக்கி விடுகின்றன. இந்த நிலைமை நாடெங்கிலும் உள்ள ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், நீதிமன்றங்கள், பொலிஸ்நிலையங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் காணப்படுகின்றது.

சிங்கள மொழியில் மாத்திரம் அச்சிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ ஆவணங்கள் அந்த மொழியை வாசிக்க முடியாத மக்களுக்கு அர்த்தமில்லாததாகின்றன. இது நாட்டின் பிரச்சினைகளுக்கு இந்த ஆவணங்களை பரிசீலிப்பதற்கான வாய்ப்பு தேவைப்படுகின்றது. அத்துடன் தமது தாய்மொழியில் அரசுடன் தொடர் பாடல் செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு.

பின்வரும் நடவடிக்கைகள் உடனடியாக் மேற்கொள்ளப்பட வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இரு மொழி மாவட்டச் செயலகங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரிவுகளிலெல்லாம் இரு மொழி நிர்வாகம் அமுலாக்கஞ் செய்யப்பட வேண்டும். சகல அரச நிறுவனங்களிலுமுள்ள அறிவித்தல் பலகைகளும் ஆவணங்களும் இரு அரச கரும மொழிகளிலும் வழங்கப்பட வேண்டும்.

இரு அரச கரும மொழிகளிலும் பரிச்சயம் பெற்ற போதுமான ஆளணியினர் உடனடியாக அரச நிறுவனங்களில் நியமிக்கப்படவேண்டும் மொழிப் பரிவர்த்தனை சேவையொன்று தாபிக்கப்படல் வேண்டும்.

இதன் மூலம் பொலிஸ் திணைக் களம், நீதிமன்றம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிலும் இரு அரச கரும மொழிகளிலும் சேவைகளை வழங்க முடியும்.

அரச நிறுவனங்களில் குறிப்பாக ஆஸ்பத்திரிகள், பொலிஸ் மற்றும் இராணுவத்தில் இனவாரியான சமத்துவம் பேணப்படல் வேண்டும். பாடசாலை வயதையடைந்த அனைத்து பிரஜைகளுக்கும் இலவச மொழிப் பயிற்சிக்கான வாய்ப்புகள் அளிக்கப்படுவதுடன் பாடசாலைகளில் இரு அரச கரும மொழிகளிலும் கற்றல் நடை முறைப்படுத்தப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# ஊழியர் நம்பிக்கை நிதிச் சங்கத்தின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள்

(கொழும்பு)

ஊழியர் நம்பிக்கை நிதிச் சங்கத்தின் உறுப்பினர்களின் பிள்ளைகளின் நலன் கருதி 2500 புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. குறிப்பாக 5ஆம் தரத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் 25 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதன் முதற்கட்டமாக 103 சிங்கள மற்றும் தமிழ்ப் பிள்ளைகள் புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொள்வர்.

இந்த விடயம் தொடர்பான விசேட நிகழ்வு இன்று பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரம நாயக்காவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும். இந்த நிகழ்வை முன்னிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட செய்தியொன்றை அனுப்பியிருந்தார்.

நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளில் இளம் சமுதாயத்தின் உச்சப் பயனைப் பெற்றக்கொள்ளும் வகையில் சிறந்த வழிகாட்டல்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சமகாலத்தில் நாடு எதிர் கொள்கின்ற தேசிய பிரச்சினை எதிர்கால சந்ததியினருக்கு விட்டு வைக்கப்பட மாட்டாது என்றும் ஜனாதிபதி தனது செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

வெளி நாடுகளுக்கு பெண்களை பணிப் பெண்களாக அனுப்பி வைக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்படும் என்றும் அதற்குப் பதிலாக தாதிமார் மற்றும் சமூகத்தில் சிறந்த அந்தஸ்து கொண்ட பதவிகளுக்கு பெண்கள் அனுப்பிவைக்கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

# நாயகன் இயேசுவை முன்னோடியாகக் கொள்

இன்று எங்கு நோக்கினும் அநீதி தலை விரித்தாடுகின்றது. முதலாளித்துவம் ஏகாதிபத்தியம் எனப்பல நாடுகள் அழித்து கொண்டிருக்கின்றன. இந்த சூழலில் மனித மாண்பு, மனித நேயம், மனிதாபிமானம் சிறிது சிறிதாகச் சின்னா பின்னமாக்கப்பட்டு அநீதி அமைப்புகளால் சமுதாய அமைப்பு சிக்கல்களால் மனிதன்

## தவக்காலப் பொழிவு

அடிமைப்படுத்தப் படுகின்றான். சாதியின் பொருளாதாரத்தின், மதத்தின், மொழியின் பெயரால் மனிதனை சமுதாயம் பிரித்துவைத்துள்ளது.

இந்த நிலையில் மனித கட்டுகளில் இருந்து முழுமனித விடுதலைபெற விடுதலை நாயகன் இயேசுவை முன்னோடியாக கொள்வது அவசியமாகின்றது. இயேசு அன்று ஆதிக்க சக்திகளுக்கு ஓர் எதிர் சக்தியாக சவாலாக இருந்தார். இப்படிப் பட்ட விடுதலை விரும்பி யேசுவுக்கு நாம் எவ்வாறு சான்றுபகர்கின்றோம்.

ஆடம்பர வழிபாடுகளாலோ உயர்ந்த கோபுரங்களாலோ அல்லே லூயா ஆரவாரங்களாலோ அல்ல இதனால் நிச்சயம் இயேசுவுக்குச் சான்று பகரமுடியாது. எம்மில் ஏற்படும் மனமாற்றம் தான் இதற்கு முடிவு கூறும். இயேசு கொண்டதோ விடுதலை வேட்கை. வறுமை, பட்டினி, பிணி, மூட நம்பிக்கைகள், அத்துமீறல்கள் போன்ற சக்திகளுக்கு எதிராக நாம் தொடுக்கும் போராட்டமும் அதனால் நாம் பெறப் போகின்ற காயங்கள், தளும்பு களே இறை அனுபவத்தைத்தரும் இயேசுவின் சான்றுகளாக இருக்க முடியும்.

இன்று எமக்கு சமாரியர்கள் யார்? இயேசுவைப் போல் பாரம்பரியங்களை உடைத்துக் கொண்டு விடுதலை வழங்கத் தயாரா? எமது செயற்பாடுகள், பங்கேற்பு, ஈடுபாடு அத்தனையையும் கேள்விக்குள்ளாக்கிப் புது உலகைப் படைப்போம்.

மரங்கள் தங்களுள் பேசிக்கொண்டனவாம் மனிதர்கள் எம்மைக் கொண்டு சிலுவையைச் செய்கிறார்களே தங்களைக் கொண்டு ஒரு இயேசுவைச் செய்ய முடியவில்லையே என்று. எனவே விடு



தலை தரும் இயேசுவை உள்ளத்தில் உருவாக்குவோம். அடிமைத் தளையில் இருந்து விடுதலை பெறத் துடிக்கும் அனைத்து ஏக்கவிழிகளுக்கும் நம்பிக்கையின் ஒளி கொடுக்க கலப்பையில் கை வைப்போம்.

என்ன நேர்ந்தாலும் திரும்பிப் பார்க்க மாட்டோம் என்ற உறுதியுடன் தவக்காலம் விடுதலை தருகின்ற காலமாக அமையட்டும்.

எஸ்.யேசுதாஸ்

# 13 ஆவது திருத்தச் சட்டம்...

ஜனாதிபதி சந்திரிகா 13-வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக அங்கு பேசியபோதே இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்ட யோசனையைக் கட்சியின் அங்கீகாரத்திற்காகச் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன அங்கு முன்வைத்தார்.

இந்த யோசனை அங்கு வாசிக்கப்பட்டபோது அதன் பிரதி ஒன்றை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கோரியதாகவும் எனினும் அதன் பிரதி எதுவும் அப்போது இருக்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதிக்கு கட்சி உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதாகவும் சண்டே லீடர் ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் 13-வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பாகவே சர்வகட்சிக் குழு யோசனையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விளக்கமளித்ததாகவும் அந்தச் செய்தி குறிப்பிடுகின்றது.

இதன்போது 13-வது திருத்தச் சட்டம் வடக்குக் கிழக்கில் அமுலில் இல்லை என்றும் அது மட்டுமன்றி 13-வது திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய பொலிஸ் மற்றும் காணி தொடர்பான அதிகாரங்கள் உள்ளிட்ட முழு அதிகாரங்களும் ஏனைய மாகாணங்களுக்கு இன்னமும் பகிரப்படவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அங்கு சுட்டிக் காட்டியதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,13-வது திருத்தச் சட்டத்தின் கீழ் அனைத்து அதிகாரங்களும் பகிரப்படவிருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் உறுதியளித்ததாக சண்டே லீடர் செய்தி குறிப்பிடுகின்றது.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைக்கு ஆதரவாகச் சுதந்திரக் கட்சிச் செயற்குழு வாக்களித்தபோதும் தமக்கு அதன் முழுப் பிரதியும் பார்க்கக் கிடைக்கும் வரையில் வாக்களிக்க முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வாக்களிப்பதைத் தவிர்த்து விட்டதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# பொலிஸ்...

பெற்றன.

சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இதேவேளை நேற்று முன்தினம் இரவு கிண்ணியாவில் 27 வயதான தமிழ் இளைஞர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அவரது வீட்டிற்கு வந்த 4 பேர் கொண்ட இளைஞர் குழுவினரே இந்த இளைஞரைச் சுட்டுக் கொலை செய்துள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-5)

# அநுரா காலமானார்...

நாடாளுமன்ற சபாநாயகராகவும் அதன் பின்னர் வெளிவிவகார அமைச்சராகவும் 2004 இல் சுற்றுலாத்துறை அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் ஜனாதிபதி அநுரா பண்டாரநாயக்கவின் சகோதரியுமான சந்திரிகாவுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலையடுத்து மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுடனும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைமை மீதும் அவர் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

இறுதியாக நடந்த மகிந்த ராஜபக்ஷவின் வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பிலும் அவர் பங்கேற்காமல் எதிரணிப் பக்கம் தாவினார். (ச-5)

# வெளிநாடு செல்வதற்கு...

இவ் விடயம் குறித்து மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினரும் பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணனிடம் முறையிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் வெள்ளைவானில் அடிக்கடி கடத்தப்படுவதும் காணாமல் போவதும் பெருகி வருவதையிட்டு விசனம் தெரிவித்த பிரதி அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்குப் புகார் செய்ய விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலிஸ் பிரிவு, பயங் கரவாதத் தடுப்புப் பிரிவு உட்பட பல இடங்களில் பிரதி அமைச்சர் விசாரித்தபோதும் குறிப்பிட்ட இளைஞன் தொடர் பாகத் தகவல் அறிய முடியவில்லை.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ். கே.இலங்கக்கோனிடமும் இது தொடர்பாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. (ச-5)

# வெள்ளவத்...

துடன் அந்த பஸ்ஸிலிருந்த பயணிகள் அனைவரும் பதறியடித்துக் கொண்டு இறங்கியோடியுள்ளனர்.

இதனையடுத்து அப் பகுதியில் நின்ற மக்களும் சிதறியடித்து ஓடியுள்ளனர். இதனால் அப் பகுதியில் பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (ச-5)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம் (மணியம்)

### (குகன் ஸ்ரோர்ஸ்,விநாயகர் ஸ்ரோர்ஸ்)



காரைநகர் வேதரடைப்பை பிறப்பிடமாகவும் 144/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பிள்ளை சுப்பிரமணியம் (பங்காளர் விநாயகர் ஸ்ரோர்ஸ், குகன் ஸ்ரோர்ஸ், மீனாட்சி அரிசி ஆலை, குகன் எரிபொருள் நிலையம்) அவர்கள் (15.03.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பிள்ளை மீனாட்சி தம்பதியினரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், தவ மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வராகி, மற்றும் குகதர்ஜினி, விக்னேஸ்வரி,தினேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரஸ்வதி, செல்லையா (பங்காளர் குகன் ஸ்ரோர்ஸ்), கமலாதேவி, சந்தான லெட்சுமி,குணரட்ணம் (பங்காளர் குகன் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் சகோதரரும்,விஜயரட்ணம் (இரட்ணம் பாமசி),சக்திவடிவேல், நவரட்ணம், இராசராஜேஸ்வரி, கனகேஸ்வரி, யோகமலர், புஷ்பமலர், ஜெயமலர் (யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), கனகமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் செவ்வாய்க்கிழமை (18.03.2008) காலையில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 9.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**144/3, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (c-873)

தகவல்,
**மனைவி, பிள்ளைகள்.**

# கிழக்கு மாகாண சபைத் தேர்தலில்...

ஏனைய கட்சிகளையும் இணைத்து விசாலமான கூட்டணி ஒன்றை அமைத்து களமிறங்கும் முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதற்காக ஜனாதிபதியின் சகோதரரான பசில் ராஜபக்ஷ எம்.பி. கிழக்கு மாகாணத்திற்குச் சென்று தொடர் சந்திப்புக்களை மேற்கொண்டு வருவதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**ஐ.தே.க. நாளை தீர்மானம்**

இத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நாளை நடைபெறவுள்ள கட்சி யின் அரசியல் உயர் பீடக் கூட்டத்தில் தீர்மானிக்கவுள்ளதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண மக்கள் அரசதுணை ஆயுதக் குழுக்களாலும் ஏனைய ஆயுதக் குழுக்களாலும் மிக மோசமான சூழலுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ள நிலையில் அவர்களுக்குச் சுதந்திரமாக வாக்களிப்பதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமாகவிருந்தால் அதுவே அவர்களுக்கான நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆயுதங்களைக்களைய வேண்டும் எனவும் கிழக்கில் சிவில் நிர்வாகத்தை மீளக் கட்டி எழுப்ப முன்வர வேண்டும் எனவும் தாம் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**கூட்டுச் சேரத் தயார் - சி.மு.கா.**

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த வொரு கட்சிகளுடனும் கூட்டுச் சேரத் தயாராகவிருப்பதாகவும் இருப்பினும் யாருடன் கூட்டுச் சேர்வது என்பது குறித்து இதுவரை தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் இன்னும் ஓரிரு தினங்களில் அது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிப்போம் என கட்சியின் அதியுயர் பீட உறுப்பினர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்றுக் கண்டியில் நடைபெற்றுள்ளதாகவும் அடுத்து வரும் தினங்களில் மட்டக்களப்பு மற்றும் திருகோண மலை மாவட்ட பிரதிநிதிகளுடனான சந்திப்புக்கள் நடைபெறவுள்ளதாகவும் அதன் பின்னரே இது குறித்த இறுதித் தீர்மானத்தை எடுக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை அது தொடர்பான இறு தித் தீர்மானம் இந்த வார இறுதியில் எடுக்கப்படும் என அக் கட்சியின் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் சார்பில் அதன் பிரதித் தலைவர் பிள்ளையான் தலைமை வேட்பாளராக நிறுத்தப்படுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடுவது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் இந்த வாரத்தினுள் அது பற்றிய தீர்மானம் எடுக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ச-5)

# கண்ணீர் அஞ்சலி

**யாழ்ப்பாணம் குகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்கள் ஆ.செல்லையா, ஆ.குணரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரர்**

## திரு. ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம்

### (மணியம்)

### (குகன் ஸ்ரோர்ஸ், விநாயகர் ஸ்ரோர்ஸ்)



**அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**இல.3, 2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**- வலம்புரி நிர்வாகம்**

# அரசுடன் பேசுவதற்குத் தயார்...

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் போர்நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பான உடன்பாட்டுக்கு வரவும் தயாராகவிருப்பதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசனின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வன்னி சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசியபோது விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் இந்தத் தகவலைத் தெரிவித்ததாக கூட்டமைப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சுமார் 3 மணி நேரம் சமகால அரசியல் மற்றும் இராணுவ கள நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடிய நடேசன்,

இதன்போது புலிகளின் இந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே காலாவதியான போர்நிறுத்த உடன்படிக்கையை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தவில்லை என்றும் பதிலாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்காக போர்நிறுத்தம் ஒன்றை செய்து கொண்டு பின்னர் போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்றின் சாத்தியப்பாடு குறித்து ஆராயலாம் என்றே புலிகள் கருதுவதாகவும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சண்டே லீடரிடம் தெரிவித்துள்ளார்.

இராணுவ கள நிலைமைகள் குறித்துப் புலிகள் மிகவும் மன உறுதியுடன் உள்ளனர். வன்னிக்குள் படையினர் நுழைய ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேசத்திற்கு தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்காகவே போர்நிறுத்தம் மற்றும் பேச்சுக்கள் தொடர்பான சாதகமான நிலைப்பாட்டை புலிகள் எடுத்துள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

சமாதானத் தீர்வு மீதான தமது நம்பிக்கையை சர்வதேசத்திற்குக் காட்டுவதற்காகவே விடுதலைப்புலிகள் தற்காப்பு யுத்தத்தை மட்டும் முன்னெடுத்து வருவதாக இந்தச் சந்திப்பில் குறிப்பிட்ட நடேசன், அரசாங்கத்தின் இராணுவத் தீர்வுக் கொள்கை குறித்த சர்வதேசத்தின் பிரதிபலிப்பைப் பொறுத்தே தாக்குதல் தந்திரோபாயம் குறித்துப் புலிகள் பரிசீலிப்பார்கள் என்றும் கூறியதாகவும் கூட்டமைப்பு உறுப்பினர் சண்டே லீடரிடம் தெரிவித்துள்ளார்.

இது குறித்துக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனிடம் கேட்டபோது, புலிகள் அவ்வாறு தெரிவித்தது உண்மையே என்று கூறிய அவர், எனினும் புலிகளின் இந்த முடிபை அவர்களுடைய பலவீனமாக யாரும் கருத முடியாது என்றும் வன்னிக் கள நிலைமை குறித்து அவர்கள் மிகவும் நம்பிக்கையுடனேயே இருப்பதாகவும் தெரிவித்தார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 17.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.